
# ஜாமக்காரன்

WATCHMAN



காவல்காரன்

VOLUME - 1 ISSUE - 1

*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



**கர்த்தருக்குள் அன்பானவர்களே,**

**உங்கள் யாவருக்கும் எங்கள் 2016 புதுவருட வாழ்த்துக்கள். நீங்கள் எனக்கு அனுப்பிய கிறிஸ்மஸ் மற்றும் புதுவருட வாழ்த்து அட்டைகள், காணிக்கைகள் கிடைத்தது. நன்றி. புதுவருடத்திற்கென்று விசேஷ காணிக்கைகள் அனுப்பிய வாசகர்களுக்கு நன்றி. மாதம் இரண்டு புத்தகம் (தமிழ்-மலையாளம்) ஜாமக்காரனை வெளியிடுவதால் செலவுகள் உங்களுக்கு அதிகம் இருக்கும் என்று என் வாசகர்களே கணவனும்-மனைவியுமாக பேசி தீர்மானம்செய்து பெரிய தொகைகளை அனுப்புகிறார்கள் என்றால் கர்த்தர் எனக்கு கொடுத்த வாசகர்கள் என் ஊழியத்தை நேசித்து யோசித்து, குறிப்பறிந்து காணிக்கை உதவிகளை தக்கசமயத்தில் செய்கிறார்கள். இப்படி என்னையும் என் ஊழிய ஒழுங்கையும் விளங்கிக்கொண்ட ஜாமக்காரன் வாசகர்களுக்காக நான் தேவனை துதிக்கிறேன்.**

**இந்த வருடத்தின் முதல் மாத ஜாமக்காரனிலேயே நான் நேசிக்கும் FMPB மிஷனரி ஸ்தாபனத்தின் சில விரும்பக்கூடாத விஷயங்களை எழுதவேண்டிய நிலை வந்ததில் மனம் மிகவும் வேதனைப்படுகிறது. தயவுசெய்து FMPB நண்பர்கள் நான் எழுதிய விஷயத்தை பொருத்துக் கொள்ளவேண்டுகிறேன். நான் இப்படி தாக்கி எழுதினாலும் இன்று ஆசியாவிலேயே உண்மையான மிஷனரி ஊழியம் செய்யும் ஸ்தாபனங்களில் ஒன்று FMPB என்பதை ஒருநாளும் யாரும் மறுக்கமுடியாது. அதில் ஊழியம் செய்யும் FMPBயினால் தெரிந்தெடுக்கப்பட்ட மிஷனரிகளில் பெரும்பாலானவர்கள் மிகவும் உண்மை உள்ளவர்களும், தியாகிகளுமாகும் என்று கூறினால் அது மிகையாகாது.**

**அப்படியே ஆங்காங்குள்ள ஒவ்வொரு ஊரிலும் உள்ள FMPB ஜெப குழுதலைவர்கள் பாரத மக்களுக்காக, மிஷனரிகளுக்காக, ஸ்தாபனத்துக்கா உண்மையான பாரத்தோடு ஜெபிப்பவர்கள் என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும். இப்படிப்பட்ட ஜெபக்குழு தலைவர்களின் ஜெபக்கூடுகைகளின் ஜெபத்தால்தான் FMPBயில் கடந்த வருடம் நடக்க**

ஜனவரி 2016

இருந்த பெரும் ஊழல்,தவறுகள் தக்கசமயத்தில் வெளிப்பட்டு அதை முளையிலேயே கிள்ளி எறியமுடிந்தது.



சகோ.ஜான் சாமுவேல்

FMPBயின் புதிய தலைவர் சகோ.ஜான்சாமுவேல்.IAS.,அவர்கள் மத்திய அரசாங்க நிர்வாகத்தில் பழுத்த அனுபவம் பெற்றவர். இவர் காலத்தில்தான் இந்திய தபால்துறையில் EMO என்ற இப்போது புழகத்தில் உள்ள தந்தி மணியாடர் திட்டத்தை இவரால் அறிமுகப்படுத்தப்பட்டது. மணியாடர் பணம் செலுத்திய அன்றே தந்தியைப்போல சில மணி நேரத்தில் ஒவ்வொருவர் கையிலும் அந்த பணம் கிடைத்துவிடும். இப்போது புழகத்தில் உள்ள நம்முடைய கம்பியூட்டர் மணியாடர் முறை இந்தியர் அனைவராலும் புகழப்படுகிறது. அப்படிப்பட்ட உயர் அதிகாரி ஒருவர் நமக்கு FMPBயின் இயக்க தலைவராக பொருப்பேற்று செயல்படுவது மிகவும் புகழப்படவேண்டிய தெரிந்தெடுப்பாகும். அவரும் அநேக ஆண்டுகளாக தன் உள்ளத்தில் FMPBயின் செயல்பாட்டில் அதிக பாரம் கொண்டதால்தான் இந்த பெரிய பொருப்பொடுக்க அவர் இசைந்தார் என்று நம்புகிறேன். இவர் காலத்தில் FMPBயில் மீதமுள்ள தேவையற்ற களைகளையெல்லாம் கிள்ளி எறிவார் என்று நம்புகிறேன். FMPB இவர் காலத்தில் மிகப் பெரிய முன்னேற்றமடையும் என்பது நிச்சயம்.

இவர் தலைவராக பொருப்பேற்ற இப்போதே இவர் நீர்வாக திறமை மிக தெளிவாக தெரிகிறது. பொது செயலர் சகோ.சாம்பொன்னையாவை நீண்டகால விடுமுறை என்று நாகரீகமாக அவரை நீக்கி அதற்கு பதில் பொதுசெயலரின் பதவியை மூன்று பாகமாக பிரித்து அலுவல்முறை பொது செயலர்கள் என்ற பெயரில் மூன்று நபர்கள் இணைந்து திட்டமிட்டு மூவரும் ஒன்றாக தீர்மானித்து FMPBயை முன்னேற்றத்துக்கு கொண்டுபோவது மிக அற்புதமான திட்டமாகும். சீக்கிரத்தில் ஊழலற்ற மிஷனரி பாரமும்,ஜெப வீரருமாகிய ஒரு நபரை இவர் FMBPயின் பொது செயலராக நியமிப்பார் என்று கர்த்தருக்குள் நம்புகிறேன்.

FMPB மிஷனரி ஸ்தாபனத்தின் புதிய தலைவர் சகோ.ஜான்சாமுவேல். IAS.,அவர்களை வாழ்த்துகிறேன். வரவேற்கிறேன். ஜாமக்காரன் வாசகர்கள் சார்பாகவும் அன்னாருக்கு வாழ்த்து கூறி தொடர்ந்து அவருக்காக ஜெபிப்பேன் என்று உறுதி கூறுகிறேன். வாசகர்களும் நீங்களும் FMBPயின் புதிய தலைவர் திரு.ஜான்சாமுவேலுக்காக ஜெபிப்போம்.

‘ வெளிநாடுகளில் வாழும் அல்லது மற்ற சபைகளில் உள்ள ஜாமக்காரன் வசாகர்களக்கு இந்தமாத ஜாமக்காரனில் பல விஷயங்கள் பிரயோஜனமற்றதாக இருக்கும். இது எங்கள் உள்ளூர் பிரச்சனையாகும். உங்கள் ஆத்துமாவுக்கும் மற்ற வாசகர்களின் ஆத்துமாவிற்கும் இம்மாத செய்திகள் பிரயோஜனமற்ற செய்தியாக இது அமைந்துவிட்டது.

‘ மணியாடர், இ-மெயில், ஆன்-லைன் மூலமாக எனக்கு காணிக்கை அனுப்பிய யாவருக்கும் என்னுடைய வாழ்த்துதல்களையும்,நன்றியையும் அறிவிக்கிறேன். ‘ ஒவ்வொரு வாரமும் ஏராளமான வாசகர்களின் எண்ணிக்கை பெருகிக்கொண்டே வருகிறது. புதிய வாசகர்களை வரவேற்கிறேன். ‘ தொடர்ந்து ஜாமக்காரன் வாசகர்கள் குடும்பத்தினர் அனைவருக்காகவும் ஜெபிக்கிறேன். நீங்களும் தொடர்ந்து ஜெபியுங்கள். தேவ கிருபையும், சமாதானமும் உங்களோடு இருப்பதாக.ஆமென்.

கர்த்தரின் உன்னத பணியில்

✍ டாக்டர்.புஷ்பராஜ்

# CSI PASTORS PAINFUL EXPERIENCES (KERALA)

## (A Letter from CSI Pastor Central Kerala Diocese)

Respected Brother ,



Wish you a blessed Christmas and a peaceful new year

I am completing my 30 yrs of service in Pastoral ministry 2016 Feb 10 65 yrs. I was ordained as a Deacon on May 1st 1987 by the Rt. Rev. Dr. M.C. MANI . Thanking my God thy wonderful blessings and guidance. 2015 November Jamakaran magazine mentioned about Diocesan council members . I would like to reply to that response .Central Kerala Diocesan council was held on Nov 20 - 21. An **Amendment** was passed for the 67 yrs of service for Pastoral ministry.To pass this they had to do it in an undemocratical way. **Big arguments** took place in the midst of it .I feel so sad in writing this matter and and the sad event that took place.

Church of South India has 24 dioceses, well educated and holding up moral values and also being so Right and Just even Order holding on to all these and being so proud of it . Well to tell you the truth Central Kerala Diocese is going down nothing is happening only corruption and partiality going on in the Diocese . I feel so ashamed in writing this . So many times I have seen that when the matter Central Kerala Diocese it comes in a praising manner but nothing to praise about this Diocese . **Deputy Moderato**r Rt. Rev. **Thomas K Oommen** is showing partiality among priests and threatening the priests and also showing a revengeful attitude towards the priests of Central Kerala Diocese if the priests massage his **feet and hands** he will love them and those who are not interested in such things **back out** and he gets angry and takes revenge on them. Is this the proper attitude of a Bishop that too a Deputy Modeartor.

1. **Homosexuality - ordination - Conjual** rights a very deep concern of the Synod put a commission study and submit report on next Synod Council meet. For this our Bishop and Deputy Moderator one among them to give consent ( I need Dr. PushpaRaj's response to this in Jamakkaran.

2. **College admissional process** regarding **capitation on high** rate from faculties.

3. **Coimbatore Engineering college** fund Hawala money of **5 crores received** or signed by Deputy Moderator. which was in **Coimbatore High Court** .It was a news on 2015 May 13th " The Hindu at Coimbatore edition and was on online news".

Bp.Deputy Moderator is now a **Dictator Kingship** man like a **Pharaoh** as Dr. wrote in the edition.

He is taking **action against** Pastors and workers who are **not praising** him for his work and actions as I mentioned before. Including me in the Pastoral Board. I was a man of Contemporary with the mentioned Bishop.

My son is is dismissed from his mother church membership just because he took Ordination of Anglican Episcopal Church International. Why is it so ?

in 2013 He was in Uganda with the Anglican Church of Uganda as a layman worker and was active in Church leadership . Therefore Bishop of Anglican Church of Uganda Diocese decided to Ordain my son the Bishop said to submit a No Objection Certificate from Rt. Rev. Thomas K Oommen he never proceeded to issue a No Objection Certificate . Now when my son took initiative in receiving ordiantion Bp. Thomas K Oommen is now feeling jealous and a revengeful attitude towards my son .

Bro. PushpaRaj's notice in the previous edition about **Women Ordination** just wait and see the mentioned Bishop Deputy becomes **Moderator next week in Central Kerala Diocese** there will be **women ordination** .

So I would like to highlight all these things before you for your information. The mentioned Bishop is a very **Cruel Bishop** and very **Cunning** in doing things like the **Indian Prime Minister Mr. Narendra Modi** the mentioned Bishop's retirement is in 2019.I am thanking God for Dr. PushpaRaj's Godly ministry. I am praying for and and best wishes.

With love and greetings

In Christ's Service vvvvvvvvvvv

**Jamakkaran(Kavalkaran):-** The same painful experiences happend to many CSI Pastors, not only in Central Kerala Diocese, Also happend in other CSI Diocese.

Last two years I have received many letters & E-mails from CSI Pastors regarding this kind of illtreatment from their Bishop's. Thay have offended very badly.

## FOR BISHOPS:

Anyone wanting to be a **leader(Bishop)** among **you must be** your **servant** and if you want to be right at the **Top(Modarator).** You must serve like a **slave**. your attitude must be like my own for I the son of mankind, didnot come to be **served.** But to **serve.** Matthew 20:26 to 28.

## TO PLEASE GOD:

**You can see that i am not trying to please you by sweet talk and flattery: no, I am trying to please God, if i were still trying to please men i could not be Christ's servent.** Galathe 1:10.

## A FINAL WARNING

## SAVE CSI TA

**WHY CSITA BENEFICIARIES ASSOCIATION IS INITIATING ELECTION TO CSI TA ALONG WITH SYNOD MEMBERS?**

CSI TA IS A LICENSED COMPANY WITH CONDITIONS THAT NO PERSONS SHALL BE APPOINTED TO SALARIED OFFICES OF CSI TA.

ACCORDING TO RULE 4 AND 5 OF THE MEMORANDUM OF ASSOCIATION OF CSI TA, IF NO ELECTION TO CSI TA IS CONDUCTED ON DUE DATE EXCULDING SALARIED PERSONS, THERE IS EVERY POSSIBILITY THAT THE **LICENSE WILL BE REVOKED AND THE GOVERNMENT MAY TAKE OVER THE COMPANY**, CSI TA. THE PRESENT MANAGEMENT SHALL GO IMMEDIATELY. FRESH ELECTION SHALL BE CONDUCTED TO AVOID TAKING OVER BY THE GOVERNMENT.

CSI TA BENEFICIARIES ASSOCIATION CHENNAI.

# FMPB-யின்

# முதல் மிஷனரி விவகாரம்:

FMPBமிஷனரி ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டபின் FMPB ஜெபக்குழுவுடன் இணைந்தவரும் FMPBயின் ஆரம்பகால தூண்களில் ஒருவரும் சென்னை **தாம்பரம்** கிறிஸ்துவ கல்லூரி பேராசிரியரும், அதே கல்லூரியின் சிற்றாலய ஆயருமாக பணியாற்றி, கடைசியாக **ஷெராம்பூர்** பல்கலைக்கழகம் தலைவராகவும் பணியாற்றி ஒய்வுபெற்றவரான Dr.Rev.J.T.K.DANIEL அவர்கள் சில நல்ல ஆவிக்குரிய ஆங்கில புத்தகங்களை எழுதியவரும், பல ஆராய்ச்சி கட்டுரைகள் எழுதும் ஆற்றல் பெற்றவருமானவராகும்.

இவர்கடந்த சில மாதங்களுக்கு முன் FMPBயின் **மிஷனரி வரலாறு** என்ற பெயரில் FMPB யின் **அறைகூவல்** மாதாந்திர பத்திரிக்கையில் வேண்டுமென்றே **தவறான தகவல்களை** அதில் எழுதி இந்தியா முழுவதும் உள்ள பல கிறிஸ்தவர்களுக்குள் குழப்பத்தை உண்டாக்கிவிட்டார்.

இவர் **அறைகூவல்** பத்திரிக்கையில் எழுதிய FMPB மிஷனரி வரலாற்றின் ஆரம்பமே **பொய்யான தகவலோடு** ஆரம்பித்து எழுதி முடித்துவிட்டார்.

**FMPBயின் முதல் மிஷனரிகள்** பட்டியலில் வேண்டுமென்றே முதல் மிஷனரியான என் பெயரை(டாக்டர்.புஷ்பராஜ்) அவர் மறைத்துவிட்டார். **சகோ.ஹாரிஸ்ஹில்டனும், அவர் மனைவியும்** மட்டும் முதல் மிஷனரிகளாக பெரியமலை சென்று FMPBயின் மிஷனரி பணி தொடங்கியதாக டாக்டர்.டேனியல் எழுதியுள்ளார்.

வரலாறு எழுதிய அவர்களுக்கு முதல் மிஷனரிகள் யார்? என்ற உண்மை மிகவும் நன்றாக தெரியும். முதல் மிஷனரிகளான எங்களுடன் அன்றுகூட இருந்தர்தானே? அதனால்தான் முன்பு நான் எழுதியபோல் தவறான தகவல்களை அவர் எழுதினார் என்று கூறுவதற்கு பதில் துணிகரமான **பொய்யை** எழுதிவிட்டார் என்று எழுதியிருக்கவேண்டும். ஒரு குருவானவர், வேதாகம கல்லூரியில் ஊழியர்களை உருவாக்கும் தலைமை பதவியில் இருந்தவர், நாங்கள் பெரியமலையில் பட்டினி கிடந்தபோது எனக்கும் ஹாரிஸ்ஹில்டனுக்கும் ஆறுதல் கடிதம் எழுதி பெலப்படுத்தியவர் ஆகும். மேலும் அவர் மிகவும் மதிக்கத்தக்கவர் என்றும் நினைத்தோம், ஆனால் FMPBயில் என்னை பிடிக்காத பலர் உண்டு. அவர்களின் தூண்டுதல் மட்டுமல்ல-திரு.டேனியலுக்கே என்னை பிடிக்காது என்பதை அவர் எழுதிய பெரியமலை வரலாறு மூலம் அறிந்து வேதனைப்பட்டேன். அவர்மீது நான் வைத்திருந்த பெரும் மதிப்பு அவர் எழுதிய மிகப் பெரிய **பொய்** செய்தியில் தகர்ந்துப்போனது. அவரா இப்படி **பொய்** பேசினார் என்று நினைத்து நினைத்து எனக்குள் அவரைப்பற்றி பெரும் சோர்வு ஏற்பட்டது.

**சகோ.தினகரன்** அவர்களின் ஊழியத்துக்கு **இயேசு அழைக்கிறார்** என்ற பெயர் வைத்ததும் நான்தான் ஈரோடு பிரப் சிஎஸ்ஐ மைதானத்தில் நடத்திய பெரும் கூட்டத்தில் மைதானத்தின் மேடையில் அமர்ந்தவாரே நானும்,சகோ.தினகரனும் இருவர் கையை ஒன்றன்மேல் ஒன்றாக வைத்து திரியேக தெய்வ நாமத்தில் அந்த பெயரை முதல் பிரதிஷ்டை செய்தோம்.

**காருண்யா கல்லூரி** கட்டவேண்டாம் அது தேவ சித்தம் அல்ல என்று மிக பிடிவாதம் செய்தவனும் நான்தான். அதன் காரணமாகவே நாங்கள் இருவரும் பிரிந்தோம்.

## உண்மை வரலாறுகள் மறைக்கப்படுவதேன்?

‘ நாம் இந்திய நாட்டு சரித்திரம், இங்கிலாந்து நாட்டு சரித்திரம்,மொகலாயர்களின் சரித்திரம் என்று பல சரித்திரங்களை நாம் அறிந்திருக்கிறோம்.

அந்தந்த காலகட்டத்தில் சரித்திரம்,வரலாறு எழுதுகிறவர்கள் ஆளுகின்றவர்களை, ராஜாக்களை,சுல்தான்களை தலைவர்களை திருப்திப்படுத்த அல்லது உண்மையான சம்பவத்தை எழுதினால் அவர்கள் தங்களை கொன்று விடுவார்களோ என்ற பயத்தில் பெரும் உண்மைகளை மறைத்தும் சிலரை புகழ்த்தியும் பல சம்பவங்களை இருட்டிப்பு செய்தும் சரித்திரம் எழுதுவார்கள். இந்திய வரலாற்றிலும் சரித்தித்திலும் அப்படி இருட்டடிப்பு செய்யப்பட்ட தகவல்கள் மிக அதிகம். வரலாறு விஷயத்தை பாடமாக எடுத்து படித்தவர்கள் அதை அறிவார்கள்.

இராமயாணத்தையே முதலில் எழுதியவர் **வால்மீகி** என்பவர்தான் அவர்கள் எழுதியதற்கும் அதன்பின் இராமயாணத்தை எழுதிய **கம்பர்** என்பவர் எழுதியதற்கும் இராமயாணத்தின் பல தகவல்களில் பெரும் முரண்பாடுகள் இருந்ததை பட்டிமன்றங்களில் சுட்டி காட்டியுள்ளார்கள்.



சிஎஸ்ஐ,மார்தோமா,லூத்தரன் சபை பிஷப்மார்கள் பலருக்கு நான் ஜாமக்காரனில் தாக்கி எழுதிய பத்திரிக்கை தகவல்கள் காரணமாக அவர்களுக்கு என்மேல் வெறுப்பும்,கோபமும் உண்டு. அதுபோல சகோ.தினகரன் முதல் நாலுமாவடி வரை பல ஊழியர்களுக்கும் என்னை பிடிக்காது. அவர்களுக்கெல்லாம் நான் சிம்மசொப்பனமாகிவிட்டேன்.

‘ **சகோ.தினகரனின்** முதல் புத்தகமான **குணமாக்கும் தழும்புகள்** என்ற புத்தகத்தை எழுதியது நான்தான். கடைசி அத்தியாயம் மட்டும் சகோ.தினகரன் எழுதினார். எங்களுக்குள் கருத்து வேற்றுமை வந்தவுடன் புத்தகத்தில் என் போட்டோவையும் எழுதிய முகவுரை முழுவதையும் நீக்கிவிட்டனர். அதன் பிறகு சகோ.**தினகரனே** உணர்த்தப்பட்டு இப்போது அந்த புத்தகத்தில் என் முகவுரையை சேர்த்துள்ளார்கள்.

‘ முதன்முதல் அவரை **வானொலியில்** பேச வைத்ததும் நான்தான்.

‘ முதன்முதல் **LP கிராமபோன்** ரிகார்ட் அவரின் பாடல் பதிவுசெய்ய ஏற்பாடு செய்ததும் நான்தான். இன்னும் ஏராளமான விஷயத்தில் முதல் ஏற்பாடுகளை செய்ததும் நான்தான். ஆனால் என்மேல் உள்ள வெறுப்பு காரணமாக அது எல்லாம் மறைக்கப்பட்டுவிட்டது.

‘ அதைப்போலவே FMPBமிஷனரி ஸ்தாபனத்திலும் **Rev.Dr.சாம்கமலேசன்** முதல் பல தலைவர்களுக்கு என்னை பிடிக்காது. ஆகவே FMPBயில் **என்னை முன்னிலைப்படுத்தி** சரித்திரம் எழுதுவதை அவர்கள் மறைமுகமாகவோ, வெளிப்படையாகவோ வரலாற்றில் உள்ள உண்மைகளை மறைக்க அவர்களில் யாராவது திரு.டேனியிலிடம் கூறியிருக்கலாம் என்று சிலர் கூற கேட்டேன். எது எப்படியோ Dr.Rev.J.T.K.DANIEL அவர்கள் எழுதியது எழுதியதே?. நான் பெரியமலை சென்றதாகவோ அங்கு ஊழியம் செய்ததாகவோ உள்ள எந்த அடையாளமும் இல்லாதபடி டேனியல் அவர்கள் மிஷனரி வரலாறு எழுதும்போது மிக ஜாக்கிறதையாக பார்த்துக்கொண்டார்கள்.

கேரளாவிலும்,தமிழ்நாட்டிலும் பலர் இவர் எழுதிய வரலாற்றை வாசித்தப்பின் அதைக்குறித்து FMPBயில் டாக்டர்.புஷ்பராஜ் அவர்களின் பங்களிப்பு என்ன? என்று எனக்கு கடிதம் எழுதத்தொடங்கினார்கள். நான் அதை பெரிதுப்படுத்தவில்லை. காரணம் நான் அவர்கள் குறிப்பிட்ட அந்த மாதத்தின் தமிழ் அறைகூவலை வாசிக்கவில்லை. ஆனால் மக்களின் அந்த கேள்விக்கு நான் என்ன பதில் எழுதவேண்டும் என்று டேனியல் அவர்களுக்கு கடிதம் எழுதினேன். எனக்கு கடிதம் எழுதினவர்களின் கடிதத்தின் நகல்களையும் அதோடு வைத்து Dr.Danielக்கு கடிதம் எழுதினேன். இதுநாள்வரை அவர் எனக்கு பதில் எழுதவில்லை. நான் நேசிக்கும் மிக நல்ல மிஷனரி ஸ்தாபனமான FMPBயைப்பற்றி மக்கள் தவறாக நினைத்து விடக்கூடாதே என்று என் மனம் வேதனைக்கொண்டது.

FMPBயில் சகோ.சாம் கமலேசனுக்கு பதில் தலைவர் ஸ்தானத்தில் **டாக்டர். ஜான்சாமுவேல்.IAS.,** அவர்கள் பொருப்பேற்றுள்ளார்கள். சகோ.ஜான்சாமுவேல் அவர்கள் எனக்கு எழுதிய கடிதத்தின் மூலமாக அவரைப்பற்றி ஊழியப்பாரத்தைப்பற்றி நன்றாக அறிந்துக்கொண்டேன். இவர் காலத்தில் FMPB மிகவும் நன்றாக இயங்கும் என்பதில் சந்தேகம் இல்லை. தேவபயம் உள்ளவர்,ஆத்துமபாரம் உள்ளவர், சிறப்பான ஆளுமை பயிற்சி பெற்ற நல்ல அனுபவசாலி. நான் டாக்டர்.டேனியல் அவர்களுக்கு எழுதிய கடிதத்தின் நகலை அவருக்கு அனுப்பினேன். ஆனால் அவரும் அதை கண்டுக்கொண்டதாக தெரியவில்லை. நிச்சயமாக நான் FMPBயின் உண்மை சரித்திரம் எழுதினால் பல விஷயங்களில் இவர்கள் எல்லாரும் பொய்யர்களாகிவிடுவார்கள். அதனால் FMPBக்கும் பெருத்த அவமானம் உண்டாகும். ஆனால் 3 மாதங்களாகியும் இவர்கள் யாரும் பதில் ஏதும் எழுதவில்லை. **அறைகூவலில்** இதற்கான விளக்கம் அவர்கள் எழுதியிருந்தால் திரு.டேனியல் விவகாரத்தை எதையும் ஜாமக்காரனில் எழுதக்கூடாது என்று நான் தீர்மானித்திருந்தேன். ஆனால் FMPB தலைவர்களின் இரகசிய திட்டம் என்னவோ?. தெரியவில்லை.

## ஒன்றை தெளிவுப்படுத்த விரும்புகிறேன்:

நான் FMPBயின் **முதல் மிஷனரி** என்பதால் கர்த்தர் எனக்கு பரலோகத்தில் விசேஷ வெகுமதி ஒன்றும் கொடுக்கமாட்டார். முதல் மிஷனரி என்பதினால் நான் மிகப் பெரிய பாக்கியம் பெற்றவன் என்ற பெருமையும்,திருப்தியும் சந்தோஷமும் மட்டும் எனக்கு உண்டு. மற்றபடி முதல் மிஷனரி என்ற பெயரில் ஒரு பெருமையும் இல்லை. ஆனால் சகோ.**ஹாரிஸ்ஹில்டனைப்போல்** மரணம்வரை **மிஷனரியாகவே** வாழ்ந்து மிஷனரியாகவே மரித்தாரே! அதுதான் தேவனுக்கு மிகவும் பிரியமானது ஆகும். அதுதான் எல்லாராலும் புகழப்படதக்கது ஆகும். ஆனால் என்னைப்போல் முதல் மிஷனரியாக ஊழியம் செய்து **குடும்பசூழ்நிலை** காரணமாக **பாதியில் மிஷனரி ஊழியத்தைவிட்டு** திரும்ப வந்த எனக்கு பெருமைக்கொள்ள ஒன்றும்இல்லை. கிறிஸ்தமக்கள் **முதல் மிஷனரி** என்று என்னை புகழ்வதிலும், நான் அதை நினைத்து பெருமைப் பட்டுக்கொள்வதில் கர்த்தருக்கும் எனக்கும் ஒரு பிரயோஜனமும் இல்லை. ஒரு ஆசீர்வாதமும் முதல் மிஷனரி என்ற அந்த பெயர் மூலம் எனக்கு கிடைக்காது என்பதை நான் அறிவேன். ஆனால் FMPB மிஷனரி வரலாற்றை இருட்டடிப்பு செய்ய சரித்திரம் எழுதியவரோடுகூட ஒரு கூட்டம் FMPBயில் உண்டு. அவர்களின் நோக்கம் வேறேஆகும். **அந்த** இரகசிய நோக்கதைத் தான் நான் வெறுக்கிறேன். என்றாலும் என்னை ஊழியத்தில் பயிற்றுவித்த மிஷனரி ஊழியம் செய்யும் பெரும் பாக்கியத்தை பெற்றுக்கொடுத்த FMPB ஸ்தாபனத்துக்கு எந்த அவமானத்தை யும் ஏற்படுத்த நான் விரும்பவில்லை. அதனால்தான் இந்த விஷயத்தை குறித்து நான் இதுவரை எதையும் கேரள மாநில **மலையாள ஜாமக்காரனில்** எழுதமாட்டேன்.

' காரணம், கேரளா மாநிலத்தில் FMPBயைப்பற்றி யாரும் அறியாத அந்த காலத்தில் தூத்துக்குடியில் டைப்ரைட்டிங் இன்ஸ்டியூட் வைத்து நடத்திக்கொண்டிருந்த சகோ. **கிளிப்போர்ட்** அவர்கள் முதன்முதல் FMPB மிஷனரி பணிக்கு முழுநேர ஊழியராக மாறி கேரளமாநில வட்டார செயலாராக நியமிக்கப்பட்டார். நானும் அவரும் நெருங்கிய ஆவிக்குரிய நண்பர்கள். அவரை FMPBக்காக கேரள மாநிலத்தில் முதலமுதல் அறிமுகப்படுத்தியது நான்தான். ஆகவே நான் அவரை கேரளா மாநிம் முழுவதும் மார்தோமா சபை, சிஎஸ்ஐ சபை என்று கேரளத்தின் அனைத்து பகுதிகளிலும் இவரையும் FMPBயையும் அறிமுகப்படுத்தி அங்குள்ள சபைகளில் ஞாயிறு ஆராதனையில் FMPBமிஷனரி ஊழியத்தை அறிமுகப்படுத்தி பிரசங்கம் நிகழ்த்தவும், கேரளத்தில் ஜெபக்குழுக்கள் அவர் உருவாக்கவும் என்னை மிகவும் மதிக்கும் மலையாள சபை ஆயர்கள் மூலமாக அவருக்கு(சகோ.கிளிபோர்டுக்கு) FMPBஐபற்றி பிரசங்கிக்க அவருக்கு வாய்ப்புகளை உண்டாக்கி கொடுத்தேன். மேலும் நான் பிரசங்கிக்கும் கேரள கன்வென்ஷனில் என் பிரசங்கத்துக்கு முன் கொஞ்ச நேரம் FMPBயைப்பற்றி மொழி பெயர்ப்புடன் அவரை பேச வைத்தேன். என்றாலும் அவர் ஊழியம் கேரளாவில் எடுபடவில்லை. எல்லாரும் அவரை அறிமுகப்படுத்திய என்னையே FMPBயைப்பற்றி பிரசங்கிக்க வேண்டும் என்று எதிர்ப்பார்த்தார்கள்.




அந்த சமயம்தான் திருவனந்தபுரத்தில் உள்ள **சகோ.ஐசாயா** என்பவர் FMPBக்காகவே தக்க சமயத்தில் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டார். அக்கார்டியன் என்ற வாத்திய கருவியுடன் நல்ல பாடும் வரமும்,பிரசங்கிக்கும் வரமும் ஐசாயா அவர்கள் பெற்றவர் ஆவார். ஆனப்படியால் கேரளமக்கள் அவரை மிகவும் விரும்பினார்கள். இப்போது பல புதிய வாசல்கள் கேரளமாநிலத்தில் FMPBக்கு அவர் காரணமாக கர்த்தரால் ஊழிய வாசல்கள் திறக்கப்பட்டது. ஏராளமான பணம் வைத்துகொண்டிருப்பவர்களான அந்த கேரள கிறிஸ்தவர்களில் பெரும்பான்மைமக்கள் நன்கு படித்தவர்களும், பணக்காரர்களுமாவர்கள். அவர்கள் தங்கள் **காணிக்கையை** யாருக்கு கொடுப்பது என்பதை அறியாமல் குழம்பிக் கொண்டிருந்தார்கள். இப்போது அவர்கள் பெரும்பாலோர் FMPBஐ விளங்கிக்கொண்டனர். கேரளத்தில் FMPBவளரும் இப்படிப்பட்ட சமயத்தில் FMPBயில் ஊழல்கள் உண்டு என்று நான் ஏதாவது எழுதினால் FMPBக்கு மிஷனரி பணிக்கான பணஉதவிகள் நின்றுபோகும். FMPBயின் ஊழிய வாசல்கள் அடைபடும் அதற்கு நான் காரணமாக இருக்கக்கூடாது என்பதற்காகவே **ஜாமக்காரனின் மலையாள பாஷை பத்திரிக்கையில் FMPBயில்** குறிப்பிட்ட Dr.டேனியல் விவகாரங்கள்,பொதுசெயலர் **சாம்பொன்னையா** பணமோசடிகள்,பழைய பொதுசெயலர் சகோ.**ஜாய்சனின்** பாவசம்பவங்கள் எதையும் ஜடையாகவோ வெளியரங்கமாகவோ இதுவரை **மலையாள ஜாமக்காரனில்** நான் எழுதவில்லை,எழுதவும்மாட்டேன். ஆனால் **முதல் மிஷனரியாக** சென்றவர்களைக்குறித்து Dr.**டேனியல்** அவர்கள் எழுதிய அந்த முதல் மிஷனரி விவரம் **பொய்** என்பதை மட்டும் நான் எழுதியாகவேண்டும். இல்லையானால் மலையாள மக்களின்முன் **என் சாட்சி பொய்யாகிவிடும்.** நான் இப்போது எழுதிய இந்த முதல் மிஷனரி விவகார விஷயத்தில் இப்போதைய என் நிலையை விளங்கிக்கொள்ளும்படி **FMPB தலைவர்களை** கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக **ஜெபக்குழு தலைவர்களை** கேட்டுக் கொள்கிறேன். ' **டாக்டர். டேனியல்** அவர்களுக்கு முதல் மிஷனரி விஷயமாக நான் எழுதிய கடிதத்தை வாசகர்களின் பார்வைக்கு இப்போது வைக்கிறேன். அடுத்த பக்கத்தில் கடிதம் உள்ளது.

‘ கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார். சங் 37:4.

‘ கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார். சங் 138:8.


**DR PUSHPARAJ**
(Regd No. 22393 INDIA)

"JAMAKKARAN"
EDITOR & PUBLISHER

89 & 90, MAJEETH STREET
OLD SURAMANGALAM
SALEM - 636 005


PHONE : 0427 - 2387499
FAX : 0427 - 2386464, SALEM.
E-MAIL : jamakaran @ yahoo.com.
Website : jamakaran.com


---

Date: 01/11/2015

To

Rev.J.T.K.Daniel,FMPB
Day Spring
15,Lakshmi Nagar
Selaiyur- Chennai - 600 073



**கர்த்தருக்குள் அன்பான சகோதரன் அவர்களுக்கு,**

**இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.**

**இத்துடன் பாண்டிசேரியிலுள்ள மலையாள சகோதரியின் எழுதிய கடிதத்தை இணைத்து அனுப்புகிறேன். நீங்கள் அறைகூவலில் பெரியமலை வரலாறு எழுதியபோது முதல் மிஷனரி யார்? என்பதில் நீங்கள் எழுதிய பொய்யான தகவலை வாசித்த பலர் கேரளா, தமிழ்நாடு மற்ற வெளிநாடுகளிலிருந்து பெரியமலை ஊழியத்தில் என் பங்களிப்பைக்குறித்து சந்தேகப்பட்டு கடந்த மாதமே பலர் எழுதிய கடிதங்கள், இ-மெயில்கள் ஏராளம். இதுவரை அவைகளுக்கு நான் பதில் அளிக்கவில்லை. காரணம் நான் பதில் எழுதினால்** FMPB**யின் ஆரம்பகால சரித்திரமும், நிகழ்கால வேதனைகளையும், ஊழல்களையும்,** FMPB**யில் கடந்த காலங்களில் நடந்த பாவசெயல்களையும் எழுதவேண்டி வரும்.**

‘ **இப்போதும் பெரியமலை சரித்திரத்தை அறைகூவலில் எழுதியது டாக்டர்.டேனியல் ஆகிய நீங்கள்தான் என்று எனக்கு தெரியாது. காரணம் நான் அதை வாசிக்கவில்லை.** FMPB**யின் சார்பில் ஒசூரிலிருந்தும், அம்பத்தூரிலிருந்தும்,** FMPB **ஆயர்களோடு மற்றொரு ஒரு நபரும் இணைந்து பெரியமலை சரித்திரத்தை எழுதப்**

போவதாக என்னிடம் கூறினார்கள். அது விஷயமாக தகவல்கள் சேகரிக்க என் வீட்டிற்குவந்து **பெரியமலை** ஊழிய விவரம்பற்றி கேட்டறிய என்னிடம் நேரில்வர அவர்கள் தேதி கேட்டார்கள் இரண்டுமுறையும் அவர்கள் கேட்ட தேதியை என்னால் கொடுக்க இயலாமல்போனதால், நானே ஒரு தேதி குறிப்பிட்டு அவர்களுக்கு அறிவித்து அவர்களின் வருகைக்காக சேலத்தில் என் வீட்டில் காத்திருந்தேன். அவர்கள் வரவில்லை. ஆனால் சில மாதங்கள் கழித்து தமிழ் **அறைகூவலில்** பெரியமலை சரித்திரவிவரம் வெளிவந்ததாக பலர் மூலமாக நான் அறிந்தேன். பொதுவாக எந்த புத்தகங்களையும் வாசிக்க எனக்கு நேரம் இல்லை. யாராவது பிரச்சனை உள்ள விவரம் என்று குறிப்பிட்டு அந்த குறிப்பிட்ட மாத பத்திரிக்கையை வாசியுங்கள் என்று அதை அனுப்பி எனக்கு அறிவித்தால் அப்போதுதான் நான் அந்த புத்தகத்தை வாசிப்பேன். அப்படித்தான் தமிழ் அறைகூவலில் நீங்கள் எழுதியதை வாசித்தேன். அதில் அந்த கட்டுரையை எழுதிய உங்கள் பெயர் குறிப்பிடப்படவில்லை என்று நினைக்கிறேன். ஆகவே **வேறு யாரோ FMPBயில் என்னை பிடிக்காதவர்கள்** அதை எழுதியிருப்பார்கள் என்று எண்ணினேன். ஆனால் FMPB**யின் மலையாள அறைகூவலில்** உங்கள் பெயர் குறிப்பிட்டு பெரியமலை விவரம், எழுதியதை வாசித்த பலர் ஏன் இந்த **பொய் செய்தி** மலையாள அறைகூவலில் எழுதப்பட்டது என்று அவர்கள் எனக்கு எழுதியபோது எனக்கு மலையாளம் வாசிக்க தெரியாததால் அதை வாசிக்க சொல்லிகேட்டேன். மலையாள அறைகூவலில் அவர்கள் வாசித்த செய்தியை கேட்டபோது, FMPBயில் நான் மிகவும் நேசிக்கும், மதிக்கும் FMBPயின் முக்கிய தூண்களில் ஒருவர், இப்படியும் **பொய்யாய்** அல்லது உண்மை சரித்திரத்தை மறைத்து எழுதுவாரா என்று டாக்டர்.டேனியலாகிய உங்களைக்குறித்து என் மனம் மிகவும் வேதனைப்பட்டது.

‘ குறிப்பிட்ட இரண்டு மாதம் மட்டும் FMPB எங்களுக்கு பணம் அனுப்பாதபோது **பெரியமலையில்** நானும், சகோ.ஹாரிஸ்ஹில்டனும் 3நாட்கள் பட்டினி கிடந்தோம். அவைகளைக்குறித்து நானும், ஹாரிஸ்ஹில்டனும் ஒரே கடிதத்தில் எங்கள் கையெழுத்திட்டு ஒரு கடிதத்தை Dr.**சாம்கமலேசனுக்கும், (டேனிஷ்பேட்டை)** சகோ. P.சாமுக்கும், அன்று ஆடிட்டராக பணிபுரிந்த சகோ.மோகனுக்கும், FMPBயின் பொது செயலர் சகோ.எமிலுக்கும், டாக்டர்.டேனியலாகிய உங்களுக்குமாக இரண்டுமுறை கடிதங்கள் எழுதினோம். யாரும் எங்களுக்கு பதில் எழுதாத நிலையில் ஒரே ஒருமுறை **நீங்கள்** ஒருவர்மட்டும் இன்லேன்ட் கடிதத்தில் நிறைய ஆறுதல் வசனங்களைக் குறிப்பிட்டு எங்களை ஆறுதல்படுத்தி பெலப்படுத்தி கடிதம் எழுதினீர்கள். அந்த சூழ்நிலையில் நீங்கள் எழுதிய கடிதம்தான் எங்களை பட்டினியிலும் உறங்கவைத்தது. அந்த கடிதம் அப்படியே என் Fileலில் இப்போதும் உண்டு. அதை வாசித்தாலே **சகோ. ஹாரிஸ்ஹில்டன், டாக்டர்.புஷ்பராஜ்,** சமையல் உதவியாளர் சகோ.ஏசா ஆகிய மூன்று நபர்கள் மட்டும்தான் முதன்முதல் **பெரியமலை** ஊழியத்துக்கு சென்றவர்கள்

என்பதைக்குறித்து அன்று உங்களால் கைப்பட எழுதப்பட்ட அந்த சரித்திர கடிதமே சாட்சி சொல்லுமே?. அன்று எங்களோடு எந்த பெண்களும் இல்லை. சகோ.ஹாரிஸ் ஹில்டனின் மனைவியும் பல ஆண்டுகள் கழித்துதான் **பெரியமலை** வந்து தங்கி சில வாரங்களில் உடனே போய்விட்டார். இந்த விவரத்தை நீங்கள் மிக நன்றாக அறிவீர்களே!

அப்படிப்பட்ட நீங்கள் அறைகூவலில் எழுதிய பெரியமலைப்பற்றிய விவரத்தில் **ஹாரிஸ் ஹில்டனும், அவர் மனைவியும்மட்டும் முதல் மிஷனரிகளாக பெரியமலை சென்றனர்** என்று எப்படி எழுத உங்களுக்கு மனம் வந்தது? விவரம்அறியாமல் எழுதினீர்களா? அல்லது FMPBயில் என்னை பிடிக்காதவர் யாராவது சொல்லிக்கொடுத்து அப்படி எழுதினீர்களா? என்பதை அறிய விரும்புகிறேன்.

நானும்,ஹாரிஸ் ஹில்டனும் எப்போது பெரியமலைக்கு சென்றோம் என்பது உங்களுக்கு மிக நன்றாகவே தெரியும். நானும் ஹாரிஸ் ஹில்டனும் பெரியமலைக்கு சென்றபோது ஹாரீஸ் ஹில்டன் அவர்களின் மனைவி டேனிஷ்பேட்டை **பெத்தேலில்** டீச்சராக பணியாற்றினார்கள் என்பதும் உங்களுக்கு நன்றாகவே தெரியும். அங்கு எத்தனை வருடம் பணியாற்றினார்கள்?. எப்போது ஹில்டன் மனைவி அவர்கள் பெரியமலை ஏறினார்கள் என்ற மிக முக்கிய விவரம்கூட நீங்கள் அறிந்துக்கொள்ளாமல் அல்லது அறிந்தும் வேண்டுமென்றே அறியாதவர்போல நீங்கள் எப்படி பெரியமலை சரித்திரத்தை எழுத துணிந்தீர்கள். நீங்கள் எழுதிய பல **ஆங்கில புத்தகங்களில்** பல குறிப்புகளையும் வருடங்களையும் ஆதாரத்தோடு **மிக அருமையாக** குறிப்பிட்டு எழுதினீர்களே? **பெரியமலை சரித்திரத்தைப்பற்றிமட்டும்** எந்த ஆதாரமும் இல்லாமல் எப்படி அதை பொய்யாய் எழுதினீர்கள்?.

‘ உலக சரித்திரங்களில் பல சரித்திர ஆசிரியர்கள் அந்ததந்த காலத்தில் ஆளுகிறவர்களை சந்தோஷப்படுத்த பல முக்கிய ஆவணங்களையும், விஷயங்களையும், சம்பவங்களையும் **இருட்டடிப்பு** செய்து எழுதுவார்கள். அந்த சரித்திரத்தை எழுதிய நபர் **யாரை சார்ந்தவர்கள்** என்பதை பொருத்து அந்த சரித்திரம் அமையும். அதன்பின் ஆளுகைக்கு வந்தவர்கள் அந்த சரித்திரத்தை இரண்டாம்முறை திருத்தியும் எழுதினார்கள். ஆனால் இது **ஆவிக்குரியவர்கள்** எழுதும் மிக முக்கியமான **மிஷனரி சரித்திரம்** ஆகும். இதில் கூடவா பொய்யையும் **ஊழிய அரசியலையும்** கலக்க முயற்சிக்கிறீர்கள்? என்னால் உங்களை நம்ப இயலவில்லையே!.

‘ **பெரியமலை சரித்திரம்** எழுத என்னிடம் அனுமதி கேட்டவர்கள். ஏன் என்னை வந்து சந்திக்கவில்லை?. அவர்கள் என்னை உண்மையில் சந்திக்க விரும்பவில்லையா? வந்திருந்தால் FMPBயின் பைலை(File) அப்படியே புகைப்படத்தோடு அவர்களிடம் காண்பித்திருப்பேனே?. நான் ஊழியனாக இருந்தாலும்,நானும் ஒரு **பத்திரிக்கை ஆசிரியன், எழுத்தாளன்.** ஆகவே ஒவ்வொரு கடிதத்தையும்,சிறு துண்டுபேப்பர் களையும்கூட **பத்திரிக்கை ஆசிரியனான** நான் அவைகளை சேமித்து வைப்பது மிக

முக்கியம். அது என் வழக்கமுமாகும். அதில் சகோ.பி.சாமுவேல்,சகோ.எமில்ஜெபசிங் பெரியமலை அடிவாரத்தில் மாரண்டஹள்ளியில் குடியிருக்கும் ஆசிரியர் திரு.ரத்தினம் ஐயா,சகோ.கனகரத்தினம்ஐயா. MA.,(உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்) ஆகியவர்கள் எனக்கு எழுதிய கடிதமும், அதோடு நீங்கள் எனக்கு எழுதிய ஆரம்ப கடிதமும் மிக முக்கிய ஆதாரக் கடிதங்கள் ஆகும். ஆகவே அதை அப்படியே சேமித்து வைத்துள்ளேன்.

' **டேனிஷ்பேட்டை பெத்தேல்** என்ற FMPBயின் சரித்திர பிரசித்திப்பெற்ற பூமிதான் என் பழையகால வாழ்க்கையை புரட்டிப்போட்டு,என்னை மனந்திரும்பின அனுபவத்தில் கொண்டுவந்து நான் கிறிஸ்துவுக்குள் இரட்சிக்கப்படவும்,என்னை புதிய சிருஷ்டியாகவும் மாற்றிய அந்த பூமி மறக்கமுடியாத மிகமுக்கிய இடமாகும். ஆகவே **பெத்தேலின்** மேலும் அந்த பூமியின்மேலும் நான் மிகவும் கரிசனை உள்ளவன். பெத்தேல் ஆஸ்பத்திரி நிர்வாககோளாறால் சீரழிந்தபோது **பெத்தேல்** ஆஸ்பத்திரிக்காக, நீங்கள் பெத்தேலின் **இயக்குனராக** பொருப்பேற்றுக்கும்படி உங்களை கட்டாயப்படுத்த (சென்னை)சேலையூருக்கே உங்கள் வீடுதேடி வந்தேன். ஞாபகமிருக்கிறதா?.

' சகோ.ஜெயகுமார் அவர்களின் கட்டுப்பாட்டில் **பெத்தேலும்,பெத்தேல் ஆஸ்பத்திரியும் அழிந்துப்**போவதை என் கண்ணால் பார்த்துக்கொண்டு இருக்க இயலவில்லை. எத்தனையோமுறை சகோ.சாம்கமலேசன் அவர்களிடம் நானே அமெரிக்காவுக்கு நேரில் சென்றும், அவர் **டேனிஷ்பேட்டை** வந்தபோதும் பெத்தேல் ஆஸ்பத்திரி நிலைக்குறித்து அவரிடம் கூறி சலித்துப் போனேன். பெத்தேலின் அழிவை காண சகிக்காமல் அதை சரிப்படுத்த முயன்ற அதன் Bபோர்டு அங்கத்தினரின் கைகள் சகோ.ஜெயகுமாரால் கட்டப்பட்ட நிலையை சாம்கமலேசன் அவர்களை நேரில் கண்டும், அறிந்தும் டாக்டர்.சாம்கமலேசன் அவர்கள் ஏன் திரு.ஜெயகுமாரின் மேல் நடவடிக்கை எடுக்கவில்லை? அவரை ஏன் நேருக்கு நேர் விசாரிக்க சாம்கமலேசனால் முடியவில்லை?. காரணம்,ஜெயகுமார்மேல் அவருக்கு உள்ள நன்றிக்கடன் ஆகும். அது அவர்களின் தனிப்பட்ட ஆரம்பகால கதை ஆகும்.

' சகோ.சாம்கமலேசன்,அவர் மனைவி.அடில்லா அவர்கள் இருவரும் குடும்ப பிரச்சனையில் இருந்தபோது,அவர்களை பெற்றோர்கள் அங்கீகரிக்காதபோது அவர்களுக்கு அந்த நாட்களில் இருக்கஇடம்தந்தும்,அடைக்கலம் தந்தும் பாதுகாப்பு கொடுத்தது சகோ.ஜெயகுமார் ஆகும். இந்த விவரத்தை சகோ.சாம்கமலேசனின் தாய் அவர்களே என்னிடம் கூறியதாகும். திருமதி.கமலேசன்அம்மையார் அறையில்தான், நானும் இப்போது ரிட்டயர்ட்ஆன மெத்தடிஸ்ட் சபை பிஷப்.சம்பத்குமாரும் தங்கியிருந்தோம். இப்படி **பெத்தேல் தலைவர்கள்** சிலரின் தனிப்பட்ட காரணங்களால் **பெத்தேல் அழிவைநோக்கி** சென்று கொண்டிருக்கிறது. இதை சரிப்படுத்த டேனியலாகிய நீங்களும் முன்வரவில்லை.

' இந்த முக்கிய விவரங்களை நான் ஜாமக்காரனில் எழுதாததின் காரணம் என்னை மனந்திரும்ப வைத்த இடமான பெத்தேலுக்கு கெட்டபெயர் வந்துவிடக்கூடாது என்பதுதான்.

' மேலும் FMPB ஸ்தாபனம்தான் என் வாழ்க்கையில் என்னை முதன்முதல் ஊழியக்காரனாக ஆக்கியது. அதுமட்டுமல்லாமல் FMPB ஸ்தாபனம்தான் மிஷனரி பாரத்தை என் உள்ளத்தின் ஆழத்தில் விதைத்து, மேலும் FMPBதான் என்னை முதல் மிஷனரியாக மாற்றியது. FMPB மிஷனரி பணிதளத்தில் நான் கொஞ்சகாலம் மட்டுமே பணியாற்றினாலும் அந்த மிஷனரி பணிதளம்தான் எனக்கு தனிஜெபம்,தனி ஜெபத்தின் மூலம் கிடைக்கும் இன்பம்,மிஷனரிஊழியத்தின் கடினபாதைகளில் கிடைக்கும் ஆவிக்குரிய சுகம் ஆகியவைகளை கற்றுக்கொடுத்தது, அந்த கஷ்டங்களை அனுபவிக்க பயிற்சிவித்தது,பணிதளத்தில் மிஷனரிகளாக ஊழியம்செய்த காலத்தில் பட்டினி கிடக்கும் போதும்,பாடுகள் அனுபவிக்கும்போதும் குறைவுகள் உண்டானப்போதும் எனக்கு ஏற்பட்ட ஆவிக்குரிய சந்தோஷம் கன்வென்ஷன்கூட்ட வெற்றியில் கிடைக்கவில்லை. பெரிய ஆத்ம திருப்தி எனக்கு மிஷனரி பணியில்தான் கிடைத்தது. அதனால்தான் இப்போதும் ஒவ்வொருமாதமும்,ஒருவாரம் ஆதிவாசிகளின்காடுகளில் மிஷனரி பணிபுரிந்தும் -இலவச வைத்தியம் செய்தும்வருகிறேன். அதை இந்த 76வயதிலும் மாதாமாதாம் ஒரு வாரம் முழுவதும் நான் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறேன்.

## டிரைபல் மிஷன்

' அந்த FMPBயில் கிடைத்த அனுபவத்தில்தான் நான் Tribal Mission என்ற மிஷனரி ஸ்தாபனத்தை உருவாக காரணமாக அமைந்தது. இப்போது 200 மிஷனரிகள் ராஜஸ்தான்வரை ஊழியம் செய்கிறார்கள். கேரள எல்லையில் ஆணைகட்டி என்ற மலையில் 120படுக்கைகள் கொண்ட டிரைபல் மிஷன் ஆஸ்பத்திரியும்,800 ஆதிவாசிகளின் பிள்ளைகள் படிக்கும் ஆங்கில மெட்ரிக்குலேஷன் Hr.Sec Schoolலும்,செவிலியர் பயிற்சிப்பள்ளியும்,ஓய்வுபெற்ற மிஷனரிகளுக்கான வயது முதிர்ந்தோர் இல்லமும், டாக்டர். முரளிதர்(இருதய வியாதி நிபுணர்) அவருடைய தலைமையில் 9 டாக்டர்களோடு அங்கு ஊழியமும் நடைபெறுகிறது.6000 இருளர் இனமக்கள் மத்தியில் நடக்கும் அந்த ஊழியர் களுக்கு ஸ்தாபகனும் அந்த ஆரம்ப ஊழியர்களில் ஒருவனுமாக அந்த ஊழியத்தை நானே தொடங்கி நடத்தும் அனுபவமும் FMPB ஊழியம் மூலம் கிடைத்தது ஆகும்.

## பெரியமலையில் உண்டான மறக்கமுடியாத மற்றொரு அனுபவம்:

' ஒருநாள் ஹாரிஸ்ஹில்டன் ஆஸ்துமா வியாதியால் மூச்சுவிடமுடியாமல் மரண அவஸ்தைபடும்போது அந்த இருண்ட காட்டில் செத்துவிடுவாரோ என்ற பயம் எனக்கு ஏற்பட்டது. உதவிக்காக கூடஇருந்த ஏசா அவர்களும் அன்று எங்கள்கூட இல்லை.

அவர் திருநெல்வேலி சென்றுவிட்ட சமயம்அது!, அவர் திரும்பிவரும்வரை ஹில்டன் அவர்களை படுக்கையில் வைத்து பராமரிக்க நான் ஒருவனாக பட்டபாடு விவரிக்க இயலாது. அந்த இருண்ட காட்டின் நடுவே தனிமையில் இருந்த நான் இயேசுவை அழுகையுடன் துணைக்கு அழைத்தேன். அந்த நேரத்தில் நான் செய்த அந்த ஜெபம் எத்தனை இனிமையானவை.

‘ கன்வென்ஷனில் பேசுவது என்பது சுகமான ஊழியம் ஆகும். மணி அடித்தால் சோறு!. கன்வென்ஷனில் சுகமான படுக்கை!, மக்களின் வரவேற்பு! புகழ்ச்சி! இவைகள் எதுவும் மிஷனரியின் பாடுகளுக்கு ஈடுஆகாது. அந்த நாட்களில் அந்த பெரியமலை காட்டில் நாங்கள் பட்டபாடுகள் மிக அதிகம். குறிப்பிட்ட அந்த நாளில் சகோ. ஹில்டனுக்கு ஊசிமூலம் செலுத்த Aminophilin அல்லது Deriphilin என்ற அந்த குறிப்பிட்ட இரண்டு ஊசி மருந்துகளும் கைவசம் இல்லாததால், மருந்து வாங்க மலையின் அடிவாரமாகிய மாரண்டஹள்ளி என்ற ஊருக்கு செல்ல புறப்பட்டேன். ஒரு ஆதிவாசியை ஹில்டன் அருகே உட்காரவைத்துவிட்டு அவருக்கு வெந்நீர்மட்டும் கொடுக்க அந்த ஆதிவாசி நபரிடம் சொல்லிவிட்டு சகோ.ஹில்டனுக்கு தேவையான ஊசி மருந்துகளை வாங்க நான் ஒருவனாக நடுகாட்டில் மாரண்டஹள்ளி நோக்கி ஓடினேன். கரடிகளுக்கு தப்பி, ஊசிமருந்து வாங்கி அன்று இரவே அதை அவருக்கு செலுத்தியதால்தான் அன்று சகோ.ஹில்டனை உயிரோடு காப்பாற்ற முடிந்தது. இந்த விவரங்களை நீங்களோ, ஹில்டன் மனைவியோ அறிந்திருக்க நியாயமில்லை. இந்த



விவரத்தை சகோ.எமிலிடம், சகோ.P.சாம்அவர்களிடம் கூறினால் நான் அனுதாபம் தேடுகிறேன் என்று அவர்கள் சந்தேகிப்பார்களோ என்று இவைகளை அவர்களிடம் கூற தயங்கினேன் என்றாலும் சகோ.ஹில்டன் அவர்கள் சகோ.எமிலிடம் சம்பவம் முழுவதையும் கூறிவிட்டார். அதைகேட்டு அவர் மிகவும் அழுதார். சகோ.ஹில்டனையும் என்னையும் அந்த குடிசைக்குள் கட்டிப்பிடித்து அழுதார். மீண்டும் எமில் ஜெபித்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

‘ இப்படிப்பட்ட நல்ல ஊழிய அனுபவங்களை FMPB மூலமாக பெற்ற நான் FMPBக்கு அவமானம் உண்டாக்கும் செய்திகள் எதுவும் ஜாமக்காரனில் எழுதிவிடக் கூடாது என்பதில் பல வருடங்கள் கவனமாக இருந்தேன். முதல் மிஷனரியான அந்த ஹில்டன் அவர்களின் **கடைசிகால மரணபடுக்கையில்** அவரை உயிரோடு டெல்லி மருத்துவமனையிலிருந்து வெளியே எடுக்க அவர் பிள்ளைகள் பட்டபாடுகளை நான் நேரில் கண்டவன் ஆகும். அன்று ஹில்டனுக்காக ஆஸ்பத்திரியில் வென்டிலேட்டருக்கும், நரம்புவழியாக செலுத்தும் மருந்துக்கும் 15000 ரூபாய் மட்டும் அவர் பிள்ளைகளிடம் கொடுத்து ஜெபித்து திரும்பினேன். மறுநாள் அவர் மரணத்தை நெருங்கிவிட்டார் என்பதை மருத்துவமனை டாக்டர்கள் அறிவித்து முழுபணம் செலுத்தாமல் மருத்துமனையிலிருந்து அவர் உடலை வெளியே அனுப்பமாட்டோம் என்று அந்த ஆஸ்பத்திரி நிர்வாகம் கூறியது சகோ.ஹில்டன் அவர்களை FMPBயின் **முதல் மிஷனரி**

என்று கூறி ஆதாயம்தேடிய FMPB தலைவர்களின் தாமதமான பதிலும் உதவியும் ஹில்டனின் பிள்ளைகளை கலங்கவைத்தது. அப்போது FMPB தலைமை செயலகத்துக்கு விவரம் அறிவித்து உதவி கேட்டீர்களா? என்று அவர் பிள்ளைகளிடம் கேட்டபோது அவர்கள் கூறிய பதில் என்னை மிகவும் வேதனையடைய செய்தது. FMPB ஸ்தாபனத்தின் செயல்பாடு எப்படி என்பதை அன்று அறிந்தேன். அதன்பின் நான் டெல்லியிலுள்ள என் ஜாமக்காரன் வாசகர்களிடம் பணம் கடனாகபெற்று மருத்துவமனை பணத்தை அடைத்து அவரது உடலை வெளியே கொண்டுவர ஏற்பாடுகளை செய்தேன். அன்று இரவே நானும் டாக்சி வைத்து சண்டிகர் நகருக்கு கேரளா மலையாளிகள் கூட்டத்தில் பிரசங்கிக்க சென்றுவிட்டேன். **முதல் மிஷனரி** என்று அவரைக்குறித்து பெருமையாக பேசி மக்களின் அனுதாபத்தைப்பெற அறைகூவலில் பக்கம்பக்கமாக எழுதுகிறீர்களே? அன்று நடந்த உண்மை நிலைவரத்தை அன்றே நான் ஜாமக்காரனில் எழுதியிருந்தால் உங்கள் கட்டுரையின் மதிப்பு என்னவாகியிருக்கும்?.

‘ FMPBயின் பொதுசெயலர் சகோ.**ஜாய்சனின்** ஆபாச விஷயம் வெளியில் தெரிந்தது. அதைக்குறித்து நம் FMPB அலுவலகத்தில் உள்ளவர்கள் அறிவித்த மேலும் பல செய்திகள் யாவும் நான் அறிந்தும் அவைகளைக்குறித்து ஏன் அன்று நான் ஜாமக்காரனில் எழுதவில்லை? என்று பலர் அதைப்பற்றி கேள்விகள் கேட்டும் நான் அவைகளை எழுதவில்லையே! ஏன் தெரியுமா?.

‘ **நம் மிஷனரி ஸ்தாபனத்துக்கு கெட்டபெயர் உண்டாகிவிட்டால் முழு ஊழியமும் தடைப்பட்டுவிடுமே!·என்பதால் மட்டுமே!**

‘ இப்போதுள்ள பொதுசெயலர்.சகோ**சாம்பென்னையா** அவர்கள் டாக்டர்.சாம் கமலேசனின் செல்லப்பிள்ளை என்று கூறப்படுபவர். உங்கள் எல்லாராலும் அவர் தகுதி இழந்தவர் என்று அறிந்தும் சாம்கமலேசன் அவர்களின் சிபாரிசுவினால் அவர் தவறாக தெரிந்தெடுக்கப்பட்டார், அவரின் லட்சக்கணக்கான கடன்கள்,அதைக்குறித்து தாம்பரம் ஜெபக்குழு தலைவர்கள் எனக்கு எழுதிய கடிதங்கள் அத்தனையும் எடுத்துக்கொண்டு சென்னை அம்பத்தூரில் உள்ள FMPB தலைமை அலுவலகத்துக்கு நான் நேரில் சென்று சகோ.சாம் பொன்னையா அவர்களிடமே ஆதாரங்களைக்காட்டி, இத்தனை லட்சம் கடன்களை வைத்துக்கொண்டு எப்படி நீங்கள் ஊழியம் செய்கிறீர்கள்? என்று கேட்டு 1.1/2மணி நேரம் நாங்கள் இருவரும் பேசினோம். தன் **மகன்** காரணமாக ஏற்பட்ட அத்தனை தவறுகளையும் அவர் ஒத்துக்கொண்டார். ஆனால் சில மாதங்களில் **பல லட்சம் கடனாளியான** அவருக்கு FMPB பரிசாக கொடுத்தது **பொதுசெயலர்** என்ற மிக முக்கிய பதவி ஆகும். இந்த நியமனத்தில் FMPBயின் சாட்சி எங்கே? அவரை பொதுசெயலராக நியமித்தது எந்த விதத்தில் நியாயம்?. ஜெபத்தில்மட்டுமே கட்டப்பட்டு இன்று சிகரமாக எழும்பி பிரகாசிக்கும் FMPB மிஷனரி ஸ்தாபனம் இத்தனை மோசமான நிலையை அடைய காரணம் என்ன?. மேலும் இத்தனை பெரும்தொகையை

கடனாக வைத்திருக்கும் சகோ.சாம்பொன்னையா அவர்களுக்கு இப்போது திடீர் சொத்துக்கள் எப்படி வந்தது?.

‘ அத்தனை தவறுக்கும் சிகரம் வைத்தார்போல் **அறைகூவல்** அச்சடிப்பிலும், பேப்பர் வாங்கியதிலும் **பணஊழல்** FMPBயில் லட்சக்கணக்கில் ஏற்பட்டதே!, அந்த ஊழலுக்கு காரணமான அந்த நபர் கையும்,களவுமாய் பிடிப்பட்டும் **சகோ.சாம் கமலேசனோ,டேனியலாகிய** நீங்களோ ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?. (நீண்டகால விடுமுறை என்ற பெயரில் இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு பதவியிலிருந்து நீக்கியதையும் அறிவேன்).

‘ FMPBக்காக மக்கள் கொடுக்கும் காணிக்கையில் **பணஊழல்** நடந்தது. பல லட்சம் கடனாளியானவருக்கும்,பத்திரிக்கை பொறுப்பு வகித்தவருக்கும்,இன்னும் சிலருக்கும் இந்த ஊழலில் பங்கு உண்டு. இவர்கள் யாவருக்கும் இவர்களுடைய வருமானத்துக்குமேல் சேர்த்த சொத்துக்கள்! எப்படி வந்தது!? அந்த சொத்துக்கள் யார் யார் பெயரில் எங்கெங்கு வாங்கப்பட்டது!. அத்தனைக்கும் ஆதாரங்களை என் வாசகர்கள் எனக்கு அனுப்பி வைத்திருக்கின்றனர், இதுவரை அவைகளை வெளியிடவில்லை. இன்று Dr.டேனியலாகிய உங்கள் **பொய்யான மிஷனரி வரலாற்று தகவல்** என்னை இப்படியெல்லாம் எழுத வைத்துவிட்டதே என்று எண்ணிஎண்ணி சோர்ந்துப்போகிறேன்.

**குறிப்பு:** FMPBக்கு அனுப்பப்பட்ட காணிக்கை பணத்தில் எந்த ஊழலும் நடக்கவில்லை பிரிண்டிங் பிரஸ்,பேப்பர் கடைக்காரர் கொடுத்த கமிஷன் பல லட்சங்கள் அதன் வழியாகதான் ஊழல் நடந்ததாக பிரஸ்காரர் கூறக்கேட்டேன். என் பத்திரிக்கைக்கும் பலமுறை அவர்களிடம்தான் பேப்பர் வாங்குவேன். ஆகவே இவர்களின் கமிஷன் இரகசியங்கள் எனக்கு தெரியலாயிற்று.

இவைகளை நான் ஜாமக்காரனில் எழுதினால் காணிக்கை அனுப்புபவர்கள் அப்படிஅப்படியே நிறுத்திவிடுவார்களே!. அதனால் மிஷனரிகள் பட்டினி கிடக்க வேண்டிவருமே!. **கொகோகோலா** முதலாளிவரை FMPB ஸ்தாபனம் பணவிஷயத்தில் நூற்றுக்குநூறு உண்மையுள்ள ஸ்தாபனம் என்ற அன்றைய நல்ல பெயருக்கு நான் இவ்விஷயங்களை **ஜாமக்காரனில்** எழுதினால் FMPB க்கு களங்கம் ஏற்பட்டு FMPBயின் பெயர் உலகம் முழுவதும் நாற்றம் வீசுமே!. இன்னும் FMPB பணிதளத்தில் நடந்த பல சம்பவங்கள் சாட்சியில்லாதது. அத்தனையும் நான் அறிவேன். அவைகளை எதையும் இதுநாள்வரை நான் குறிப்பிட விரும்பவில்லை. அவைகளை திரு.டேனியலாகிய நீங்களெல்லாம் கண்டும்,அறிந்தும் நடவடிக்கை எடுக்காததின் காரணம் என்ன?. முதல் மிஷனரியாக **டாக்டர்.புஷ்பராஜ்** அவர்கள் பெயர் வந்துவிடக்கூடாது என்பதில் நீங்கள் காட்டிய அக்கறை ஸ்தாபனத்தை சரிப்படுத்த முயன்றிருக்கலாமே!.

' என்னை ஊழியனாக்கிய உண்மையான FMPB மிஷனரி ஸ்தாபனத்துக்கு என்றைக்கும் நான் களங்கம் உண்டாக்கமாட்டேன். என்னைப்பற்றி எத்தனை இருட்டடிப்பு திரு.டேனியலாகிய நீங்கள் செய்தாலும்,என்னை எத்தனை அவமானப் படுத்தினாலும்,கர்த்தரின் மிஷனரி பணியான FMPBயை என் எழுத்தால் ஒருநாளும் களங்கப்படுத்தமாட்டேன் என்று வைராக்கியமாக இத்தனை வருடங்கள் பொருத்திருந்தேன். ஆனால் டேனியலாகிய நீங்கள் எழுதிய மிஷனரி வரலாறு மூலம் தவறுகளை சுட்டிக்காட்டி என்னை எழுத வைத்துவிட்டீர்களே?. ஆனால் பெரியமலை சரித்திரத்தைப்பற்றி திரும்பி பார்க்கிறேன்.1 என்ற கட்டுரையில் 1970ல் நான் விவரமாக எழுதினேன். அதை மறுபதிப்பும் செய்து பல வருடங்களுக்கு முன் வெளியிட்டேன். அதில் நீங்கள் எதை எதை மறைத்தீர்களோ! அவைகளையெல்லாம் அன்றே அதில் எழுதிவிட்டேன். இப்போது புதிதாக நான் ஒன்றும் சேர்த்து எழுதமாட்டேன். ஆனால் அந்த கட்டுரை நெம்பர்.1ஐ மறுபடியும் எழுதி வெளியிடப்போகிறேன். என்றாலும் என் உள்ளத்தின் ஆதங்கத்தை இக்கடிதம்மூலம் எழுதி உங்களுக்கு அறிவிக்கிறேன்.


நான் உங்களையும், உங்கள் கவுரவமான அனுகுமுறையையும் மிகவும் மதிப்பேன். ஆனால் பெரியமலை கட்டுரையை நீங்கள் எழுதிய விதம் என் உள்ளத்தை பெரிதும் பாதித்துவிட்டது.

இப்படிக்கு
இயேசுவின் பணியில்
உங்களால் மறைமுகமாக வெறுக்கப்படுபவன்
**டாக்டர்.புஷ்பராஜ்**

**குறிப்பு:** இத்துடன் பாண்டிசேரியிலிருந்து ஒரு சகோதரி எழுதிய கடிதத்தை இணைத்துள்ளேன். ஜிப்மர் ஆஸ்பத்திரியின் டாக்டர் அவர்கள் எழுதிய அந்த கடிதத்தை இத்துடன் அனுப்புகிறேன். இதற்கு நான் என்ன பதில் எழுதுவது? என்பதை மட்டும் நீங்கள் எனக்கு எழுதுங்கள்.

' என் ஒழுங்கு எப்படியென்றால் யாராவது யாரைப்பற்றியாவது என்னிடம் கேள்வி எழுப்பினால் அந்த கடிதத்தை அவருக்கே அனுப்பி பதில் பெற்று, கடிதம் எழுதிய அவர்களுக்கு அனுப்புவேன். சகோ.தினகரன்,பிஷப்மார்கள் இப்படி யாரானாலும் அதுதான் என் ஒழுங்கு. ஆகவே இக்கடிதத்துக்கு உங்கள் பதில் எனக்கு கிடைக்காவிட்டால், உங்கள் கடிதத்தைப்பற்றிய என் அபிப்ராயத்தையும், அறைகூவலில் எழுதப்பட்ட உங்கள் கட்டுரையின் தவறான நோக்கத்தைப்பற்றியும் நான் நிச்சயம் எழுதுவேன்!. மன்னிக்கவும்.

# பெரியமலையின் **முதல் மிஷனரிகள்**



**சகோ.ஹாரிஸ் ஹில்டன்**



**டாக்டர்.புஷ்பராஜ்**



மிஷனரி பணியில் உதவிக்காக சகோ.**ஏசா** என்பவர் இவர்களுடன் அனுப்பப்பட்டவர்.

**ஜாமக்காரன் வாசகர்கள் டாக்டர்.டேனியல் அவர்களையும் FMPBயின் தலைவரையும் கேட்கவேண்டிய கேள்விகள்:**

1). உண்மையில் FMPBயின் **முதல் மிஷனரிகள்** யார்?

2). சகோ.**ஹில்டன்** மனைவி அவர்கள் எத்தனை காலம் கழித்து ஹில்டனுடன் பெரியமலைக்கு ஊழியம் செய்ய வந்தார்.

3). டாக்டர்.**டேனியல்** அவர்கள் **முதல் மிஷனரிகள்** விஷயத்தில் ஏன் **பொய்** சொன்னார் அல்லது அவரை அப்படி எழுத சொன்னது யார்? இப்படி இருட்டிப்பு செய்ததால் FMPBக்கு என்ன லாபம்? இவைகளை நீங்கள் கேட்டு பதில் பெற்று எழுதுங்கள் அல்லது **அறைகூவலில் வெள்ளை அறிக்கை** சமர்ப்பிக்க கேளுங்கள்.

**FMPBயின் பல வரலாறுகளை இருட்டடிப்பு செய்து பொய் செய்தி எழுதியவர்களுக்கு வாசகர்கள் இதை காப்பி எடுத்து அனுப்புங்கள்.**

**FMPB ஜெபக்குழு தலைவர்கள் பலர் FMPBயின் வரலாறுகளையும், ஊழிய விவரங்களையும் பல வருடங்களுக்கு முன்பே துண்டுபிரதிகளாக சிறு புத்தகங்களாக அச்சடித்து பல சபைகளில் விநியோகித்து வந்தார்கள். அவர்களில் FMPB ஜெபக்குழு தலைவரும் ஜாமக்காரன் வாசகருமான ஜெப வீரர் ஒருவர் கீழ்காணும் துண்டுபிரதியை அனுப்பினார். வேறு பலரும் அனுப்பியுள்ளனர். யாவருக்கும் சிரம் தாழ்த்தி நன்றி கூறுகிறேன்.**

---

**"சுவிசேஷ விஷயத்தில் என்னோடேகூட மிகவும் பிரயாசப்பட்டார்கள். அவர்களுடைய நாமங்கள் ஜீவ புத்தகத்தில் இருக்கிறது" பிலி 4:3**

# நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

விண்-மண் வேந்தராம் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இனிய வணக்கங்கள் வாழ்த்துக்கள். தேவனின் கரிசனையை தங்களின் தரிசனமாக்கிக்கொண்ட விசுவாச உள்ளங்கள் மூலம் உலகில் புதிய தரிசனம் உருவாகும் என்பதற்கு நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு சாட்சியாக திகழ்ந்து வருகிறது.

1959ல் Rev.Dr.தியோடர் வில்லியம்ஸ் அவர்கள் தலைமையில் IMS,NMS ஊழியங்களுக்காக சகோ.பி.சாமுவேல், டாக்டர்.சாம் கமலேசன் இவர்களோடு இன்னும் ஒரு சிலராக **கோவில்பட்டியில்** வாரம் ஒருமுறை கூடி ஜெபித்து வந்தனர். அதன் விளைவாக நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு FMPB உருவானது. 1965 அக்டோபர் 21 முதல் 23 வரை **முதல் கிதியோனியர் முகாம்** பண்ணைவிளையில் நடைபெற்றது. போ அல்லது அனுப்பு என்ற குறிக்கோளை முன்வைத்து ஜெபக்குழுக்கள் ஜெபித்து வந்தனர்.

1967ல் தருமபுரி மாவட்டம் **பெரியமலையில்** பெட்டமுகுலாளம் என்ற இடத்தை முதல் பணித்தளமாக்கி சகோ.**ஹாரிஸ் ஹில்டன்,டாக்டர்.புஷ்பராஜ்** ஆகிய இவர்களை முதல் மிஷனரிகளாக பிரதிஷ்டை செய்தார்கள். சகோ.**எமில்ஜெபசிங்** அவர்களுடன் **சகோ.சாமுவேல்,Rev.Dr.சாம் கமலேசன்,சகோ.சத்யசிங்** ஆகியவர்கள் பிரதிஷ்டை ஆராதனை மலை அடிவாரத்தில் விடியற்காலை 5.30 மணிக்கு நடத்தினார்கள். அதன்பின் **பெரியமலை** பணிதளத்தித்தை நோக்கி யாவரும் பல மைல்கள் மலை ஏறி நடந்து சென்று சகோ.ஹாரிஸ்**ஹில்டன்,டாக்டர்.புஷ்பராஜ்** இவர்களுடன் உதவிக்கு சகோ.**ஏசா** என்பவரையும் பணிதளத்தில் அழைத்து சென்று அங்கு பன்றிகுடிசை வீட்டில் விட்டுவந்தார்கள். 1969ல் **சகோ.எமில் ஜெபசிங்** அவர்கள் கல்லூரிப் பணியைத்துறந்து பொதுச்செயலர் ஆனார்கள். அவர்கள் மூலம் FMPB வானொலி நிழ்ச்சியும் ஒலிபரப்பப்பட்டது.

‘ 1971ல் **மருதகுளம்** உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியராகப் பணிசெய்து வந்த சகோ.**ஹெல்கியா** அவர்கள் உத்தரபிரதேச மாநிலத்தில் **பஸ்தி** என்ற இடத்திற்கு முதல் வட இந்திய மிஷனரியாக அனுப்பப்பட்டார்.

‘ 1978ல் **ஊஞ்சமாலா,காம்லாவில்** FMPB பெயரில் **முதல் ஆலயத்தை** பிரதிஷ்டை செய்தார்கள்.

‘ 1979ல் **குஜராத்** மாநிலத்தில் **கல்மூடி** என்ற பணிதளத்தில் உள்ள ஆதிவாசி குடும்பத்திலிருந்து FMPB மிஷனரிகளால் **முதல் கிறிஸ்தவ திருமணம்** நடைபெற்றது.

## கோதுமை மணி செத்தது:

‘ 1983ல் **பீகாரில்** டெப்ரிகோல் பணித்தளத்தில் மிஷனரியாகப் பணியாற்றிய தூத்துக்குடியை சேர்ந்த சகோ.**ஜெயராஜ்** அவர்களும், அவர்களின் ஒரே மகன் **டேவிட் லிவிங்ஸ்டன்** ஆகிய **இருவரும் ஒரேநாளில்** மலேரியா நோயால், **ஒரேஇரவில் கர்த்தருக்குள் நித்தியரை யடைந்தார்கள்.** பற்பல தடைகள், அடி,உதைகள், சிறைவைப்பு, ஆலயத்தகர்ப்பு, மதமாற்ற தடைசட்டம் போன்ற பல பாடுகளின் வழியே FMPB மிஷனரிகள் கடந்து சென்றாலும் ஆதிவாசிகளின் பணித்தளத்தில் பெரும் அறுவடையை நோக்கி ஒவ்வொரு நாளும் FMPB வளர்ந்தேறி வருகிறது. இன்று **பஞ்சாப்பில்** மட்டும் 1,70,000(ஒரு லட்சத்து எழுபதாயிரம்) **விசுவாசிகள்** மலர்ந்துள்ளார்கள்.

‘ அற்பமாக ஆரம்பிக்கப்பட்ட FMPB ஜெபக்குழு இன்று 23 **மாநிலங்களில்**, 257 விதமான பல வித இன மக்கள் கூட்டத்தில் **318 பணித்தளங்களை** FMPB பணித்தளம் அமைத்து செயல்பட்டு வருகிறது. 6692 **கிராமங்களில்** FMPB திருச்சபை உருவாகியுள்ளது. 1177 இடங்களில் **ஆலயங்கள்** கட்டிக்கொடுக்கப்பட்டு ஆராதனை நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 5515 கிராமங்களில் ஆலயம் கட்டிக்கொடுக்க வேண்டிய மிகப்பெரிய தேவை உண்டு.

## வேதாகம மொழபெயர்ப்பு ஊழியம்:

‘ மேலும் FMPB மூலமாக 14 **மொழிகளில்** வேதாகம மொழிபெயர்ப்பு பணி நடைபெற்று வருகிறது. 52 இடங்களில் சிறுவர் விடுதி அமைக்கப்பட்டு அங்கு 13059 **சிறார்கள்** பராமரிக்கப்பட்டு வருகின்றனர். 2 **ஆங்கிலபள்ளிகளில்** 600 **மாணவர்களும்**, 13 **ஆரம்ப பள்ளிகளில் 1227 மாணவர்களும் வடஇந்திய பணிதளத்தில்** கல்வி பயின்று வருகின்றனர். அங்கேயே **இரு மருத்துவமனைகள்** நிறுவப்பட்டு மருத்துவப் பணியும் நடைபெற்று வருகிறது.

இன்று **ஆசியாவிலேயே** முதன்மை பெற்ற மிஷனரி ஸ்தாபனமாக FMPB திகழ்ந்து வருகிறது. அவசரத் தேவை, துாரதரிசனம், **ஆத்தும ஆதாயப்** பாரத்துடன் 2014-2015ல் 120 பேர் **உ.பி** மாநிலத்தில் **ஜான்சியில் மிஷனரிப்பயிற்சி** பெற்றுவந்தனர். இவர்களில் 99 பேர் வடஇந்திய பணிதளத்திற்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

# FMPBபெரியமலை முதல் மிஷனரிகள்



**சகோ.ஹாரிஸ்ஹில்டன்**



**டாக்டர்.புஷ்பராஜ்**



மிஷனரி பணியில் உதவிக்காக சகோ.**ஏசா** இவர்களுடன் அனுப்பப்பட்டார்.

**டாக்டர்.சாம்கமலேசன்,எமில்ஜெபசிங்,சகோ.பி.சாமுவேல்,சகோ.மோஹன்** ஆகியோர் பெரியமலையில் **பெட்டமுகுளாளம்** என்ற இருண்ட கிராமத்தில் மிஷனரிகளை தங்க வைக்க குடிசைகள் தேடி அலைந்தனர். பன்றிகள் கொள்ளைநோயால் செத்துவிட்டபடியால் பன்றிகளின் குடிசைதான் முதல் மிஷனரிகள் வீடாக கிடைத்தது. **பன்றி அளவு உயரம்** இருந்த அந்த குடிசையில் குனிந்துதான் உள்ளே செல்லமுடியும். டாக்டர்.சாம்கமலேசனோடு மற்ற நால்வரும் அந்த குடிசையில் நிற்க இடம் இல்லாததால் வெளியில் நின்றவாரே ஜெபித்து **எஹோவாயீரே(தேவனால் பார்த்துக் கொள்ளப்படும்**) என்று அந்த குடிசைக்கு பெயர்வைத்து பிரதிஷ்டை செய்தார்கள். ஏசா உணவு தயாரித்தார். சாப்பிடும் நேரம் வந்தது, இருட்டும்முன் மாரண்டஹள்ளி மற்ற சகோதரர் திரும்ப வேண்டும். சகோ.எமில் அவர்களை காணோம். தேடினோம். பிறகு பன்றி குடிசையின்பின்புறம் சகோ.எமில் முழங்கால்படியிட்டு அழுதுகொண்டிருந்தார். அந்த காட்சி என்னால் மறக்கமுடியவில்லை. இப்படிப்பட்ட ஜெபவீரர்களால்தான் இன்று பெரியமலையில் **முதல் ஆலயம்** கட்டப்பட்டு **முதல் ஆராதனையும்** தொடங்கப்பட்டு இப்போது நிறைய ஆதிவாசி குடும்பங்கள் சபையின் விசுவாசிகளாக இருப்பது எத்தனை சந்தோஷம். அன்று கோவில்பட்டியில் கூடி ஜெபித்த அந்த ஆரம்பகால ஜெப வீரர்களின் தரிசனம் நிறைவேறிவிட்டது. கர்த்தருக்கே மகிமை உண்டவதாக. ஆமென்.



❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# முக்கிய அறிவிப்பு:

' என்னோடு **தொலைபேசியில்** தொடர்புக்கொள்ள முடியாதவர்கள், **கடிதங்கள்**மூலம் ஜெபகுறிப்புகளையும், குடும்ப பிரச்சனைகளையும் அனுப்பலாம்.

' இ-மெயில் மூலம் நீங்கள் எனக்கு எழுதினாலும் உங்கள் விலாசத்தையும்,தொலைபேசி எண்ணையும் தயவுசெய்து குறிப்பிட்டால், கடிதம்மூலமாக பதில் எழுத இயலும். வாரம் இரண்டு நாட்கள்மட்டும் வீட்டில் நான் இருப்பதால் நீங்கள் அனுப்பும் இ- மெயில்க்கு கடிதம்மூலம் என் பிராயணத்தில் உடனே பதில் எழுதமுடியும். அதனால் இ-மெயில் அனுப்புபவர்கள் உங்கள் விலாசத்தையும்,தொலைபேசி எண்ணையும் அனுப்புங்கள்.

## காணிக்கை

**சில வாசகர்கள் ஜாமக்காரன் பத்திரிக்கைக்காக காணிக்கை அனுப்பினேன் நீங்கள் பத்திரிக்கை அனுப்பவில்லை** என்று எழுதுகிறார்கள். மணியாடரில் நீங்கள் காணிக்கை அனுப்பும்போது எதற்காக அந்த பணம் அனுப்பினீர்கள் என்பது நீங்கள் எழுதமுடியாது. எனக்கு காரணமும் தெரியாது. ஆகவே பணம் அனுப்பிய உடன் ஒரு கடிதத்தில் உங்கள் முழு விலாசத்தையும் தொலைபேசி எண்ணையும் எழுதி எனக்கு பத்திரிக்கை அனுப்பவும் என்று அறிவிக்கவும். புதிய வாசகர்களாக இருந்தால் நான் புதிய வாசகர் என்று எழுதவும். நன்றி.

# கேள்வி - பதில்

# ஜாமக்காரனின் பதில்கள்

## சென்னையில் வெள்ளம்

**கேள்வி: கடந்த 2015 டிசம்பர் மாதத்தில் சென்னை,கடலூாில் உண்டான வரலாறு காணாத தொடர்மழையும், வெள்ளப்பெருக்கும் அதன் காரணமாக தமிழகத்தில் ஏற்படுத்திய பேரழிவையும்,பெரும் பாதிப்புகளும் வேதாகமத்தின் அடிப்படையில் நமக்கு உணர்த்துவது என்ன?**

**பதில்:** *இதற்கு பதிலாக அறிவியல்,சமூக பொருளாதார மற்றும் துறை சார்ந்த பல்வேறு நியாயமான அதிகாரிகளின் அலட்சிய காரணங்களை ஆளுகிறவர்களின் தவறுகளையும் காரணமாக கூறி மேலும் பல காரண காரியங்களை மனிதர்கள் பலரும் கூறினாலும் பரிசுத்த வேதாகமத்தின் அடிப்படையில் காரணம் என்னவோ ஒன்றுதான் என்பதை நாம் புரிந்துக்கொள்ளவேண்டும். அதைத்தான் நாம் விசுவாசிக்கவேண்டும். வேதாகமத்தைக் கையிலெடுத்துக்கொண்டு தொடர்ந்து கவனமாக கீழே குறிப்பிடும் வசனங்களை வாசியுங்கள். அப்போது உங்கள் சந்தேகங்களுக்கு எல்லாம் விடை கிடைக்குமென்பதில் சந்தேகமில்லை.*

***கர்த்தருடைய செயல் இல்லாமல் ஊரில் தீங்கு உண்டாகுமோ?**(ஆமோஸ் 3:6). **ஆண்டவர் கட்டளையிடாதிருக்கக் காரியம் சம்பவிக்கும் என்று சொல்கிறவன் யார்?**(புலம்பல் 3:37). தேவன் எதையும் **முகாந்தரமின்றி செய்யமாட்டார்** என்பதை அறிந்துக்கொள்(எசே 14:23). வானிலை அறிக்கை மழை,புயல் இவற்றைக்குறித்து வேண்டுமானால் முன்னறிவிக்கிலாம்: எச்சரிக்கை விடுக்கலாம். மத் 16:2,3. ஆனால் **மழையை வருஷிக்கப் பண்ணத்தக்கவர் யார்** என்பதை எரே 14:22 விவரிக்கிறது. நம் தேவனாகிய கர்த்தர் அல்லவோ அதைச் செய்கிறார். அவர் ஒன்றில் **தண்டனையாகவும்**, ஒன்றில் தம்முடைய பூமிக்கு **உபயோகமாகவும்** ஒன்றில் **கிருபையாகவும்** அவைகளை வரப்பண்ணுகிறார். (யோபு 37:11-13, யோவேல் 2:23,24, 2 இராஜ 3:16-18, ஆமோஸ் 5:8, மத் 5:45, அப் 14:15-17.*

*நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷகுமாரன் **வரும்காலத்திலும்** நடக்கும்.(மத் 24:37-39) என்று நம் ஆண்டவர் தீர்க்கதரிசனமாகச் சொன்னவை இன்று நிறைவேறி வருகிறதல்லவா?(ஆதி 6:5,6, ஆதி 19:4-10இ ஏசா 1:3, எரே 2:13, எரே 8:7 மீண்டுமொருமுறை பூமியை அழிக்க ஜலப்பிரளம் உண்டாவதில்லை என்று தேவன் நித்திய தலைமுறைக்கென்று உடன்படிக்கை செய்திருக்கிறார்( ஆதி 9:11-17)என்பதே நமக்கு ஆறுதல்.*

*படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக, மனுவைப் படைத்தான் தன்னை வணங்க என்பது பழமொழியானாலும் அது பழைய மொழியாகிவிட்டதே!. **சிருஷ்டிகரை மறந்து (புறக்கணித்து) சிருஷ்டிகளைத்** தொழுதுக்கொள்ளும் போக்கு மக்களிடையே தீவிரமாகப்பற்றி எரிகிறதே, கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழிவிசாலமுமாயிருக்கிறது. அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்(மத் 7:13,14) என்றார் இயேசு. **தேவனாகிய கர்த்தர் தம்மை மக்கள்***

*தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத்தேடும்படி விரும்புகிறார்.... அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார். இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்(அப் 17::27, லூாக் 13:1-5)வாசித்து தியானிக்கவும்.*

*நீ கற்று நிச்சயித்துக்கொண்டவைகளில் நிலைத்திரு. வேத எழுத்துக்களை நீ சிறுவயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும்.(2தீமோ 3:14,15). திகைத்துத் திடுக்கிடத்தக்க காரியம் தேசத்திலே நடந்து வருகிறது. தீர்க்கதரிசிகள் கள்ளத்தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். ஆசாரியர்கள் அவர்கள் மூலமாய் மக்களை ஆளுகிறார்கள். இப்படியிருப்பது எங்களுக்கும்(மக்களுக்கு) பிரியமாயிருக்கிறது. ஆனாலும் முடிவிலே என்ன செய்வீர்கள்? எரே 5:30,31. எல்லோரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி கர்த்தர் நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்(2பேதுரு 3:9) என்பதை ஒருபோதும் மறவாதே. நம் ஆண்டவருடைய வருகை சமீபமாயிருக்கிறது. உன் தேவனைச் சந்திக்க ஆயத்தப்படு(ஆமோ 5:12).* - (Selected)

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# தீர்க்கதரிசனம்

**கேள்வி: சென்னை-கடலூர் மழை வெள்ளத்தின் பேரழிவைக்குறித்து தமிழ்நாட்டில் தங்களை தீர்க்கதரிசி என்று கூறிக்கொள்ளும் ஒருவரும் சென்னை வெள்ள பேரழிவைக்குறித்து தீர்க்கதரிசனம் கூறவில்லையே என்று ஜாமக்காரனில் எழுதினீர்கள். இத்துடன் சகோ.செல்வராஜ் என்பவர் மழை வெள்ள அழிவைப்பற்றி தீர்க்கதரிசனம் கூறியுள்ள சிடியை அனுப்புகிறேன். அதற்கு நீங்கள் என்ன பதில் சொல்கிறீர்கள்?**

**பதில்:** *ஜெப கோபுர குடும்ப தீர்க்கதரிசிகள், நாலுமாவடி சகோ.மோகன் சி.லாசரஸ் தீர்க்கதரிசிகள் எசேக்கியா,ஏஞ்சல் டிவியின் சாதுசெல்வராஜ்,வின்சென்ட் செல்வகுமார் இவர்களெல்லாம் வருடாவருடம் உலக்குகெல்லாம் வழமையாக தீர்க்கதரிசனம் கூறும் பொய்யர்கள் அல்லவா? இவர்கள் யாரும் சென்னை வெள்ள பேரழிவைப்பற்றி ஒரு வார்த்தையும் கூறவில்லை என்பதையும் அவர்கள் பொய்யர்கள் என்பதையும் வாசகர்களுக்கு விளக்குவதே என் நோக்கம். இவர்களைப்பற்றி இந்தியர்கள் அறிவார்கள்.*

*ஆனால் நீங்கள் கூறும் சகோ.செல்வராஜ் என்பவரைப்பற்றி எனக்கே தெரியாது. ஆகவேதான் கூறுகிறேன். இவர்கள் யாவரும் வேதம் கூறும் கள்ளதீர்க்கதரிசிகளும் கள்ள உபதேசிகளுமாயிருக்கிறார்கள். நீங்கள் அனுப்பிய அவர்கள் செய்திகளை சிடியில் கேட்க எனக்கு நேரம் கிடையாது. ஆனால் அவருக்கு அப்படி கூறியிருந்தால் வேத ஒழுங்கின்படி* **நினிவே பட்டிணம்** *அழியும்முன்* **யோனாவை** *நினிவேக்கு அனுப்பி அவர்களை எச்சரிக்கை சொல்லி ஒரு சிலரையாகிலும் மனம் திரும்ப வைக்க தேவன் கிருபையுள்ளவராக இருந்தாரே?. அதன்படி நீங்கள் குறிப்பிடும் செல்வராஜ் ஏன் சென்னை மக்களுக்கு* **துண்டுபிரதி மூலமாகவோ, பத்திரிக்கை விளம்பரமாகவோ** *அல்லது அழிவு வரும் இடத்தில் அவரே நேரில் சென்று தெரு கூட்டம் நடத்தி அவர் சிடியில் கூறிய அந்த தீர்க்கதரிசனத்தை ஏன் சென்னை மக்களுக்கு அறிவித்திருக்கக்கூடாது. அதுதானே* **வேத ஒழுங்கு.** *யோசியுங்கள்.* ❖❖❖❖❖❖❖❖❖

# மரணத்துக்கு பின்

**கேள்வி: நீங்கள் டாக்டர்.வசந்தகுமார் அவர்கள் எழுதிய மரணத்துக்கு பின் என்ற புத்தகத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியை வசந்தகுமார் அவர்களின் பெயர் குறிப்பிட்டு**

**ஜாமக்காரனில் விமர்சித்திருக்ககூடாது? அவர் மனம் சங்கடப்பட்டதாக லண்டனில் சிலர் கூறக்கேட்டேன்.**

***பதில்:*** *ஆம். அதற்காக வருந்துகிறேன். வாசகர்கள் பல வருடமாக அவர் எழுதிய அந்த குறிப்பிட்ட புத்தகத்தின் அந்த குறிப்பிட்ட* ***பரலோகம் சம்பந்தமான குழப்பமான*** *பகுதியை குறித்து பல வருடமாக ஜாமக்காரன் வாசகர்கள் கேட்ட கேள்விக்கு கேட்டவர்களுக்கு மட்டும் நான் பதில் எழுதியிருந்தால் அதே கேள்வியோடு ஆயிரக்கணக்கான வாசகர்கள் இருப்பதை அவர்கள் எழுதிய கடிதம் மூலம் அறிந்தேன்.*

*ஆகவே அந்த குறிப்பிட்ட* ***பரலோகம்*** *பற்றி விஷயத்தை ஜாமக்காரனில் அந்த புத்தகத்தை எழுதிய* ***சகோ.வசந்தகுமார்*** *அவர்களின் பெயரையும் குறிப்பிடவேண்டியதானது. மிக சிறந்த வேத ஞானமும், வேத ஆராய்ச்சியும் செய்யும் ஒரு சிறந்த எழுத்தாளர்.* ***நிச்சயம் சங்கடப்படும்*** *என்றாலும் நான் எழுதிய கருத்தில்* ***எனக்கு தெளிவு உண்டு.*** *நான் எழுதியதால் எனக்கு மன திருப்தியும் உண்டு.*

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# விலாசம் புதுபித்தல்:

**ஜாமக்காரன் புதிய விலாச பட்டியல்** ஏறக்குறைய முழுவதுமாக தயாரிக்கப்பட்டு விட்டது. விலாசம் புதுப்பிக்கும் கார்டை அல்லது ஜாமக்காரன் வேண்டும் என்று விண்ணப்பிக்கும் கடிதங்களை வைத்து **புது விலாச பட்டியல்** தயாரித்துள்ளோம்.

பழைய வாசகர்களை நாங்கள் இழக்க விரும்பவில்லை. இரண்டுமுறை ஜாமக்காரன் மூலம் விலாசம் புதுப்பித்தல், ஞாபகமூட்டல் அறிவிப்பை எழுதியும் சிலர் கவனிக்கவில்லை. ஆனால் இவர்களெல்லாம் இப்போது மிக தாமதமாக ஒவ்வொருநாளும் நாங்கள் அறிவிப்பை கவனிக்கவில்லை என்றும், எங்கள் விலாசத்தை மறுபடியும் சேர்க்கவேண்டும் என்றும், ஏராளமானவர்கள் எங்களுக்கு எழுதிக்கொண்டேயிருக்கிறார்கள்.

அவர்கள் பெயர்களை நாங்கள் புதிய விலாச பட்டியலில் உள்ள **புதிய அங்கத்தினர் விலாசப்பட்டியலில் இணைத்து** அவர்களுக்கு ஜாமக்காரனை அனுப்ப ஆரம்பித்துவிட்டோம்.

புதிதாக யாராவது ஜாமக்காரன் தங்களுக்கும் வேண்டும் என்று விரும்பினால், உங்கள் முழு விலாசத்தையும் எங்களுக்கு எழுதி விண்ணப்பித்தால் உடனே விலாசப்பட்டியலில் நேரிடையாக **அவர்கள் விலாசத்தை** இணைத்துக்கொள்வோம்.

எங்கள் வாசகர் குடும்பத்தில் ஒருவராக அவர்களை இணைத்துக்கொள்வதில் நாங்கள் சந்தோஷப்படுகிறோம். அவர்களுக்காக ஜெபிப்பதிலும் தொடர்ந்து கவனம் செலுத்துவோம்.

புதிய விலாசப்பட்டியலுக்கு நாங்கள் கேட்டுக்கொண்டப்படி அவரவர்களின் விலாசங்களை எங்களுக்கு எழுதியும், பழைய விலாசத்திலுள்ள தவறுகளையும் குறிப்பிட்டு, தெளிவாக எங்களுக்கு கடிதம்,இமெயில் மூலமாக எழுதி இந்த புது விலாசப்பட்டியலை தயாரிக்க எங்களோடு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

**புதிய விலாசத்துடன்** இனி எங்களோடு தொடர்புக்கொள்ளவும், மறக்காமல் உங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் **கணணி எண்ணையும்** எழுதவும்.

**- (ஜாமக்காரனுக்கு சந்தா ஏதும் இல்லை).**

# நாலுமாவடி மோகன் சி.லாசரஸ் கூடாரம் கலைகிறது:

ஜெபத்தில் பெயர்களை அழைக்கும் பொய் தீர்க்கதரிசனம் கூறும் **சகோ.மோகன் சி.லாசரஸ்** அவர்களின் வலது கை போல் செயல்பட்ட அனைத்து பொருப்புகளையும் திறம்பட நிர்வகித்த சகோதரி.**ரோசலின்ரெக்ஸ்** ஜனவரி மாதம் முதல் **இயேசு விடுக்கிறார்** ஸ்தாபனத்திலிருந்து விலகிவிட்டார்.



**ரோசலின்ரெக்ஸ்**

அடுத்து சகோ.**ஸ்டீபன்** இயேசு விடுவிக்கிறார் குழுதலைவராக செயல்பட்டவர் அவரும் **இயேசு விடுவிக்கிறார்** ஸ்தாபனத்தைவிட்டு விலகிவிட்டார்.

**மோகன் சி.லாசரஸ்** அவர்களின் இயேசு விடுவிக்கிறார் ஸ்தாபனத்தின் டிரஸ்ட் தலைமையை டாக்டர்.அன்புராஜ் அவர்கள் கைப்பற்ற முயற்சி எடுப்பதாக கேள்விப்படுகிறோம்.

சகோதரி.**ரோசலின்ரெக்ஸ்** அவர்கள் சகோ.மோகன் சி.லாசரஸ் ஸ்தாபனத்தைவிட்டு ஏன் விலகினார் என்பதை அவரே அறிவிப்பதை விரைவில் ஜாமக்காரனில் வெளியிடுகிறேன்.

## CMC காப்போம்- ஜெபகூட்டம்

சமீபத்தில் CMCக்காக இணைந்து ஜெபிப்போம் என்று சகோ.**ஆர்.ஸ்டான்லி** அவர்களும், சகோ.**மோகன் சி.லாசரஸ்** அவர்களும் கோடிக்கணக்கில் செலவு செய்து நடத்திய ஜெபக்கூட்டத்தின் விளைவாக CMCயில் உள்ள சில புறமதத்தினர் வெளிமாநிலங்களிலிருந்து வந்த நபர்கள் பலரும் கொடுத்த புகார் காரணமாகவும் CMCக்காக வெளியிட்ட ஜெபகுறிப்பு புத்தகத்தின் சில வார்த்தைகள் CMC நிர்வாகிகளை பிரச்சனைக்குள்ளாக்கியுள்ளதாலும், நாலுமாவடி மோகன் சி.லாசரஸ் இந்த ஜெப கூட்டத்தை பயன்படுத்தி இயேசுவிடுவிக்கிறார் ஜெபக்குழுவை CMCயிலும், வெல்லூரிலும் ஆரம்பித்து பணபிரிவு நடத்துவதாக வந்த செய்தி அறிந்து வெல்லூர் CMC ஆஸ்பத்திரி நிர்வாகம் சகோ.**மோகன் சி.லாசரஸ், ஆர்.ஸ்டான்லி** அவர்களின் ஊழிய நடவடிக்கைகளை CMC ஆஸ்பத்திரி எல்லைக்குள் தடை செய்யப்பட்டதாக அறிவித்ததாக செய்திகள் வந்துள்ளது.

## ஊழியம் சினிமா வியாபாரமாக மாறுகிறது: சகோ. மோகன் சி.லாசரஸ்

**சினிமா தயாரிப்பாளர் ஆவிவிட்டார்.**

| | |
|---|---|
| Executive Producer | : Bro.Mohan C.Lazars |
| Dance | : பிரசாத் - ஹரி |
| கலை | : ஜெ |
| பாடல்கள் | : கான பாலா |
| இசை | : கே.எஸ்.சைமன் |
| எடிட்டர் | : வில்சன் - சண்டை பயிற்சி: தளபதி டினேஷ். |

## சினிமா படம் வெளியீடு 2016 ஜனவரி 30ம் தேதி:

**குறிப்பு:** இனியாவது மக்கள் ஊழியக்காரர்களைக்குறித்து விளங்கிக்கொள்வார்களா? மக்கள் நாலுமாவடி **திறப்பின் வாசல்** மற்றும் **இயேசு விடுவிக்கிறார்** ஆகிய ஊழியங்களுக்கு லட்சலட்சமாக, சிலர் கோடிகோடியாக காணிக்கை அனுப்பிவைக்கிறார்கள் இப்போது இதே மாதிரி செய்திகள் மூலம் காணிக்கை சினிமா வியாபாரத்தில் முதலீடு செய்கிறார்கள் என்பதை விளங்கிக்கொள்ள இயலும் என்று நினைக்கிறேன்.

சினிமா தயாரிப்பாளரான சகோ.மோகன் சி.லாசரஸ் அவர்கள் ஊழியத்தையும் அவர் பேசும் **அந்நியபாஷையையும்**, ஜெபத்தில் அவர் **பெயர் அழைப்பதையும்** பரிசுத்த ஆவியானவரின் கிரியை என்று இனி நீங்கள் நம்பினால் அது உங்கள் இஷ்டம்.

## இனம் இனத்தோடு சேரும்:

இந்த சினிமா தொழிலை முதலில் ஆரம்பிக்க இருந்தது. ஏஞ்சல் டிவியின் மூவரணிதான் என்பது உங்களுக்கு தெரியுமல்லவா? அவர்கள் குழுமம்தான் ஆரம்பித்திருக்கவேண்டும். ஆனால் நாலுமாவடி மோகன் சி.லாசரஸ் வியாபாரத்தில் முந்திக்கொண்டார்.

‘ இவர்களின் **குரு கல்லூரி தொழிலதிபராக** காருண்யாவை தன் மகனுக்காக ஆரம்பித்து இவர்களுக்கு முன்மாதிரியானார். **தங்கசாவி** - விற்கும் தொழிலதிபராக மாறினார். ஆனால் நிறையபேர் இவர் திட்டத்தில் ஏமாறவில்லை. கொஞ்சம் **தங்க சாவிகள்தான்** விற்க முடிந்தது.

‘ அதன்பிறகு உடன்படிக்கை **ஆசீர்வாத பெட்டி** தொழிலையும் ஜெபத்தோடு தொடங்கினார். எந்த பணக்காரரும் தங்கள் பத்திரங்கள், தொழில் டாக்குமெண்டுகளை அந்த உடன்படிக்கை பெட்டிக்குள் வைக்க முன் வரவில்லை. ஆகவே அந்த தொழில் ஆரம்பத்திலேயே செத்துப்போனது.

‘ ஒரு குழந்தைக்கு 2000 ரூபாய் வாங்க அந்த பிள்ளைகளுக்காக 25 வருடங்களுக்கு ஜெபிக்க கர்த்தர் தன்னை பரலோகத்துக்கு அழைத்துசென்று கூறினார் என்று அறிவிக்க, நம்ம சபை கிறிஸ்தவர்களும்,பிஷப்மார்களும் போட்டிபோட்டு வீட்டில் எத்தனை பிள்ளைகள் உண்டோ? அத்தனை பிள்ளைகளின் தலைமீதும் 2000 பணம் கட்டினார்கள். **இளம்பங்காளர்களுக் கெல்லாம்** காருண்யாவில் இன்ஜினிரியங் கல்லூரியில் இடம் கிடைக்கும் என்று நம்பினார்கள். கிடைத்தது பட்டை நாமம்தான். இவர்கள் பிள்ளைகள் பெயரில் கொடுத்த 2000 ரூபாய்க்கும் காருண்யாவுக்கும் சம்பந்தமில்லை என்று அறிவித்த பின்னும் நம் கிறிஸ்தவர்களுக்கு புத்தி வரவில்லை.

இப்போது அதே **இளம்பங்காளர் தொழிலை** மகன் வெற்றிகரமாக மறுபடியும் தொடங்கி நடத்திக் கொண்டிருக்கிறார். இப்படி பிள்ளைகள் பெயரில் மிகப்பெரிய ஏமாற்று நடந்தால் தம்பி.பால்தினகரன் தன் தங்கையை இழக்க நேர்ந்தது. இப்போது தான்பெற்ற மகளே **அந்நிய நூகத்தில் இணையும்** ஆபத்தில் அகப்பட்டதாக பேசிக்கொள்கிறார்கள். ஆசீர்வாதம் கொஞ்சம் கொஞ்சமாக இழக்க, இப்போது **தாயுக்கும்-மகனுக்கும்** பிரச்சனை எழும்பி அது முற்றிய நிலையில் இருப்பதாக செய்திகள் வெளிவந்துவிட்டது.

‘ இவைகள் யாவும் அறிந்தும் **ஏஞ்சல் டிவியின்** மூவரணியினர் சினிமா தொழிலை துணிந்து ஆரம்பிக்க தொடங்கிவிட்டார்கள். அதன் ஆரம்ப விழாவாக சினிமா டைரக்டர் **பிரபு சாலமன்** சினிமா பட வெளியீட்டு விழாவில் ஏஞ்சல் டிவி சாதுசெல்வராஜ் அவர்கள் கிறிஸ்தவர்கள் சினிமா பார்ப்பது பாவமல்ல என்று அறிவித்தார்.

ஒரு காலத்தில் சினிமா பாவம் என்று நம்மை பலர் பயமுறுத்தினார்கள். ஆனால் இப்போது சாதுவாகிய நான் கூறுகிறேன். சினிமா பாவமல்ல என்று உறக்க கூறி அறிவித்து டைரக்டர்.பிரபுசாலமனின் காதல் கதை உள்ள சினிமாவை ஆசீர்வதித்து ஜெபித்தார்.

இப்படி சினிமா மோகமும், சினிமா வியாபாரத்தில் பெரும் லாபம் கிடைக்கும் என்று நினைத்து ஏஞ்சல் டிவி மூவரணியில் ஒருவரான சகோ.மோகன் சி.லாசரஸ் அவர்கள் சினிமா எடுக்க முந்திக்கொண்டார். இந்த ஜாமக்காரன் உங்கள் கையில் கிடைக்கும்முன் சினிமா படம் பிதா,குமாரன் பரிசுத்த ஆவியானவரின் நாமத்தில் அந்நியபாஷையும் பேசி அந்த சினிமாவை வெளியிட்டிருப்பார்கள்.

## மோகன் சி.லாரசஸ் அவர்களின் அறிக்கை:



ஏஞ்சல் டிவியின் 8ம் வருட ஆண்டு நிறைவு விழாவில் சகோ.மோகன் சி.லாசரஸ் கூறினார். கர்த்தர் என்னை பரலோகம் அழைத்து சென்று ஏஞ்சல் டிவியில் இணைந்து ஊழியம் செய் என்றார். இந்த எங்கள் இணைப்பை கண்ட பலர் என்னிடம் போயும்போயும் ஏஞ்சல் டிவி சாதுசெல்வராஜ், வின்செண்ட் செல்வகுமார் இவர்களின் கூட்டத்திலா இணைகிறீர்கள் தயவுசெய்து அவர்களோடு சேர வேண்டாம் என்றார்கள். ஆனால் ஆண்டவர் என்னிடம் அவர்களோடு இணைந்து செயல்படு என்று கட்டளையிட்டபின் யார் அதை மீற முடியும். மீறக்கூடாதே! என்று மோகன் சி.லாசரஸ் கூறியதை நான் டிவியில் கண்டேன், கேட்டேன்.

அந்திக்கிறிஸ்துவின் கடைசி 7 ஆண்டுகளில் அந்திக்கிறிஸ்துவால் வெட்டி வீதியில் வீசப்படும் **எலியா,ஏனோக்கு** ஆகியவர்களின் உடல்களை உலகம் முழுவதும் காண்பிக்க டெலிகாஸ்ட் செய்யத்தான் **கர்த்தர் ஏஞ்சல் டிவி** ஊழியத்தை எங்களிடம் கொடுத்தார். அதற்கென்று டிவி நிலையம் எருசலேமில் பல கோடி ரூபாய்களுக்கு வாங்கிவிட்டோம். இன்னும் டிவி டிஸ்க், ஆண்டனா போன்ற விலை உயர்ந்த பல கருவிகள் வாங்க வேண்டியுள்ளது என்று எழுதி அறிவித்தத்தை அவர்களின் பத்திரிக்கையிலும் டிவியிலும் கண்டிருப்பீர்கள்.

அந்திக்கிறிஸ்து காலத்தில் யார் உலகில் இருப்பார்கள் என்று வேதம் கூறுகிறது என்பதை அறிவீர்கள்தானே? ஆம். இயேசுகிறிஸ்துவின் **இரண்டாம் வருகையில்** கைவிடப்பட்டவர்கள் மட்டுமே அந்திக்கிறிஸ்துவின் ஆட்சியில் இருப்பார்கள். ஆகவே இந்த மூவரணியில் உள்ள மூவரும் கர்த்தரால் கைவிடப்பட்ட கேஸ் என்பது தெளிவு. இனி மோகன் சி.லாசரஸ், ஏஞ்சல் டிவி, ஆசீர்வாதம் டிவி ஆகியவர்களோடு காணிக்கை மூலம் பங்கு வைத்தவர்கள் யாவரும் இவர்களுக்கு துணையாக இரண்டாம் வருகையில் கைவிடப்படுவது நிச்சயம்.

வேதம் கூறுகிறது: **அநியாயம் செய்கிறவர்கள் இன்னும் அநியாயம் செய்யட்டும். அசுத்தமாயிருப்பவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும். வெளி 22:11**

**இதோ சீக்கிரமாக வருகிறேன்** என்று இயேசு கூறினார்.

**அதோடு பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும் என்று கூறி... அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே (இயேசுவுடன்) கூட வருகிறது** என்றார்.

# கடைசிகால இராஜ்யத்தின் தொனி - பக்கம் 7, டிசம்பர் 2015 - ஆசிரியர்.வின்செண்ட் செல்வகுமார்.

# பொய்யான அனுபவ சாட்சிகள்:

தீர்க்கதரிசன திருமூர்த்திகளில் ஒருவரான **சகோ.வின்செண்ட் செல்வகுமார்** தன் பத்திரிக்கையான **கடைசிகால இராஜ்யத்தின் தொனி** என்ற பத்திரிக்கையில் தன் கூட்டத்தில் ஜெபத்தில் சிலருக்கு நிகழ்ந்த அனுபவங்களை எழுதியுள்ளார்கள்? கவனியுங்கள்.

## 1. முழங்காலில் அக்கினி பொறிகள்:

நீங்கள் ஜெபிக்கும்போது ஜெபவேளையில் நான் நேர் முழங்காலில் நான் ஜெபித்துக்கொண்டிருந்தேன். அப்போது என் **முழங்காலில் அக்கினி பொறிகள்** புறப்பட்டு வருவதை (மங்கலாக அல்ல)தெளிவாக பார்த்தேன் என்று மதுரை முத்து(சென்னை) எழுதியுள்ளார். இதன் அர்த்தம் என்ன? முழங்காலில் அக்கினி பொறிகள் புறப்பட்டு வருவது யாரை அழிக்க அதன் விளக்கத்தை வின்செண்ட் செல்வகுமார் தன் பத்திரிக்கையிலேயே எழுதினால் நல்லது. மேலும் அதற்கான வசன ஆதாரமும் எழுதினால் பிரயோஜனமாக இருக்குமே. இப்படிப்பட்ட பொய் சாட்சிகளை சகோ.வின்செண்ட் செல்வகுமார் அதிகமாக ஊக்குவிக்கிறார். முட்டாள்தனமான இந்த சாட்சியில் எத்தனைப் பேர் வசனத்தைவிட்டு விலகியிருப்பார்களே!. தெரியாது!

## 2. ஆனியால் வசனம் நாக்கில் எழுதப்பட்டது:

இன்னொருவரின் சாட்சி: ஜெபநேரத்தின்போது தேவ தூதர்கள் இறங்கிவந்து எல்லா ருடைய நாவிலும் **தேவனுடைய வார்த்தைகளை** ஒரு ஆனியால் எழுதுவதை கண்டேன். பிறகு விளக்கை அந்த தூதன் எடுத்துக்கொண்டு எல்லார் மேலும் அவ்வொளி வீசும்படி செய்தார்.

இந்த சாட்சியில் வாசகர்களுக்கு என்ன ஆவிக்குரிய செய்தி விளங்குகிறது? முட்டாள்தனத்தின் எல்லைக்கே இவர்கள் போய்விட்ட மாதிரி தெரியவில்லை!. அந்த தூதன் பேனா,பென்சில் இல்லாத காலத்திலா ஆனியை தூக்கிக்கொண்டு வந்தான். அதுவும் **நாக்கில் எழுதினான்** என்றால் என்ன கொடூரம் இது?. வின்செண்ட் செல்வகுமார் கூட்டத்துக்கு போவோர் **கடப்பாறை** எடுத்துக்கொண்டு போங்கள். தூதன் உங்கள் நாக்கில் கடப்பாறை கொண்டு எழுத உதவியாக இருக்கும். வின்செண்ட் செல்வகுமார் அதை நம்புகிறார் என்றால் சாட்சி எழுதுகிற உங்கள் புத்தி எங்கே போனது? ஏன் ஆனியினால் நாக்கில் எழுதவேண்டும்?. நம் வேதம் கூறுகிறது. உம் வசனத்தை என் இருதயத்தில் வைத்து வைத்தேன் என்கிறது. இவர்களின் தூதன் ஆனி எடுத்துக்கொண்டு திரிகிறார்.

## 3. ஜெபவேளையில் மூன்று விதமான புறாக்கள் இறங்கிவருகிறது என்று வின்செண்ட் செல்வகுமார் சொன்னபோது என்னை ஒரு அக்கினி வந்துமூடியது.

அது என்ன? 3 விதமான புறாக்கள்? அதன்பின் அக்கினி(நெருப்பு) வந்து மூடினால் அவர் வெந்துபோவாரே? மேலும் அவர் கூறுகிறார். உடனே சாத்தானின் இடத்தை கர்த்தர் தனக்கு வெளிப்படுத்தினராம். அதன்மூலம் இந்திய தேசத்துக்கு வரபோகும் கொள்ளை நோய்களைப்பற்றி கர்த்தர் காட்டினார் என்று எழுதியுள்ளார். இந்த தரிசனத்தால் என்ன பிரயோஜனம்? கொள்ளை நோயை இவருக்கு காட்டிவிட்டால், மக்கள் உடனே தடுப்பு ஊசி போட்டுக் கொள்வார்களா? இவர்மேல் அக்கினி(நெருப்பு) மூட அக்கினி அபிஷேகம் இவர்மேல் இறங்கியது என்கிறார். ஆரம்பத்திலேயே அக்கினி இவரை மூடிவிட்டது என்றாரே. அதற்கு அப்புறம் எதற்கு மற்றொரு அக்கினி அபிஷேகம்(இந்த கவர்ச்சிவார்த்தைகளால்தான் வின்செண்ட் செல்வகுமார் மக்களை ஏமாற்றுகிறார்). இவர் மட்டுமல்ல அந்நியபாஷை பேசும் அத்தனை பேரும் அக்கினி அபிஷேகம் என்ற வார்த்தை சொல்லியே மக்களை முட்டாளாக்குகிறார்கள்.

செய்திகள்! செய்திகள்!!

# PROSPERITY DOCTORIN TV PREACHER PASTOR.SAM P.CHELLADURAI'S NEW BUSINESS & NEW DOCTORINE.

# WARNING:




**STEEL MAN COMPETITION INAGURATION AND PRAYER.PASTOR.SAM P.CHELLADURAI.**

# டேனிஷ்பேட்டை திருமதி.விசுவாசம் அவர்கள் கர்த்தருக்குள் நித்தியடைந்தார்.

தமிழ்நாட்டில் சேலம் அருகேயுள்ள டேனிஷ்பேட்டையில் இப்போதுள்ள பெத்தேல் பெல்லோஷிப் என்ற கிறிஸ்தவ ஸ்தாபனம் ஆரம்பித்த அனாதை பிள்ளைகளின் இல்லம்,FMPBயின் மாநில முகாம் என்ற வருடந்திர கூடுகை வழமையாக நடத்தப்படும் அந்த குறிப்பிட்ட இடம் திரு.பிலிப்ஸ்,திருமதி.பிலிப்ஸ் என்பவர்களின் சொந்த நிலம் ஆகும். சகோ.பி.சாமுவேல்,சகோ.சாம்கமலேசன் ஆகியவர்கள் இணைந்து ஏறக்குறைய 200 ஏக்கர் நிலத்தை இலவசமாக அவர்களிடமிருந்து பெற்றார்கள். சகோ.பி.சாமுவேல் அவர்கள் அனாதை பிள்ளைகளை வளர்க்கும்முன்பே திரு.திருமதி.பிலிப்ஸ் அவர்கள் 6 பிள்ளைகளை வளர்த்து படிக்க வைத்து திருமணத்தையும் நடத்தி அந்த 6 பிள்ளைகளும் இப்போது பேரன்,பேத்தி எடுத்து நல்ல நிலையில் இருக்கிறார்கள். இதில் விசேஷம் என்னவென்றால் சகோ.பி.சாமுவேல் டேனிஷ்பேட்டையில் ஊழியம் ஆரம்பிக்கும் முன்பாகவே திரு.திருமதி.**விசுவாசம்** அவர்கள் அந்த ஏற்காடு அடிவார காடுகளிடையேஉள்ள சிறு கிராமங்களில் வாழும் குடும்பத்தில் உள்ள பிள்ளைகளுக்கு இலவசமாக கல்விகற்றுக்கொடுக்கும் பாரத்தோடு ஏற்கனவே அவர்கள் சேலத்தில் செய்துக்கொண்டிருந்த ஆசிரியர் வேலையைவிட்டு கர்த்தருக்காக ஊழியம் செய்யவும் அந்த கிராமங்களுக்கு கல்வி அறிவை கொடுக்கவும் இயேசுவையும் அவர்களுக்கு அறிவித்து, ஞாயிறு பள்ளிமூலம் சுற்றுவட்டாரத்திலுள்ள நிறைய சிறு பிள்ளைகளுக்கு இயேசுவை இவர்கள் அறிவித்தார்கள். அதன்பின் பெத்தேல் பெல்லோஷிப் மூலமாக சகோ.பி.சாமுவேல் அவர்கள் ஆரம்பித்த ஆரம்ப பள்ளிக்கூடத்தில் இணைந்து ஆசிரிய பணி தொடங்கினார்கள். ஆரம்ப காலத்தில் சிறிய வருமானத்தில் தன் 3பிள்ளைகளையும் வளர்த்து ஆளாக்கி இன்று இவர்களின் மகள்.பிரமோ கல்லூரி படிப்பைமுடித்து,மகனும் கல்லூரி படிப்பைமுடித்து பிள்ளைகள் யாவரும் அமெரிக்காவிலும்,கனடாவிலும் ஊழியத்தில் உன்னதநிலையில் இருக்கிறார்கள். 1964ம் வருடம் நான் பெத்தேலில் டாக்டராக உதவி செய்தபோது திருமதி.**விசுவாசம்** குடும்பத்தை நெருக்கமாக அறியமுடிந்தது. பிள்ளைகளை கல்லூரி படிப்பு படிக்கவைக்க மிகவும் சிரமப்பட்டார்கள். ஒரு சிறுவீட்டில் அவர்கள் குடியிருந்ததையும் பிள்ளைகளின் வறுமைநிலையும் நான் அறிவேன். ஆனாலும் தங்கள் குறைகளை யாரும் அறியாதபடி நல்ல சாட்சியுடன் வாழ்ந்தார்கள். **என்னை கனம் பண்ணுகிறவனை நானும் கனம் பண்ணுவேன்** என்ற கர்த்தரின் 1சாமு 2:30 வாக்கின்படி அன்று கஷ்டப்பட்டார்கள். ஆனால் இன்று மிகவும் உயர்த்தப்பட்டு அவர்கள் செழிப்போடு குடும்பமாய் வாழ்கிறார்கள். அன்று சேலம் பட்டிணத்தைவிட்டு காடுகளுக்குள்ள கிராமத்தைதேடி ஊழியம்செய்ய வந்தார்கள். இன்று பிள்ளைகளை கர்த்தர் உயர்த்தி அவர்கள் மூலமாக கடல்கடந்து வெளிநாடுகளில் செல்வாக்குடன் கர்த்தர் அவர்களை வாழவைத்துள்ளார்.

2015 ம் வருடம் திருமதி.**விசுவாசம்** அவர்கள் சரியான விசுவாசத்தோடு தன் ஆத்துமாவை கர்த்தருக்கு ஒப்புவித்து மரணத்துக்கு நல்லஆயத்தத்துடன் ஒப்புக்கொடுத்துள்ளார்கள். பல வருடமாக என் பத்திரிக்கை ஜாமக்காரனை விரும்பி வாசிப்பார்கள். அமெரிக்காவில் இருந்தாலும், கனடாவில் மகளிடம் வாழ்ந்தாலும் இரண்டு நாடுகளுக்கும் ஜாமக்காரனை தவறாமல் கேட்டு வாங்கி படிப்பார்கள். ஜாமக்காரனை படிப்பதோடல்லாமல் அதில் ஏதாவது தான்ஏற்றுக்கொள்ளாத கருத்து காணப்பட்டால் தயங்காமல் தைரியமாக உரிமையோடு அதை பக்கம்பக்கமாக கடிதம்மூலம் எழுதி 3 மாதத்துக்கு ஒரு முறையாவது எனக்கு அறிவிப்பார்கள். ஒவ்வொரு வருடமும் என் பிறந்த நாளுக்கு தன் கையால் ஏதாவது எம்ராய்டரி முறையில் வாழ்த்துக்களை துணியில் ஊசிநூலில் தைத்து அதோடு வசனத்தையும் தைத்து வரைந்து அனுப்புவார்கள். என் மாமியாரையும்,என் மனைவியையும் மிகவும் நேசிப்பார்கள். அதை அவர் எழுத்தில் காணலாம். என் மனைவியை மகள் என்றுதான் கடிதத்தில் குறிப்பிடுவார்கள். அமெரிக்கா-கனடா எந்த நாட்டிலிருந்தாலும் ஆலய ஆராதனையில் கலந்துக்கொள்வார்கள். வெளிநாட்டிலிருந்துக்கொண்டே சேந்தமங்கலம், இராசிபுரம்,சேலம் ஆகிய இடங்களில் பலருக்கு கடிதம் மூலம் ஆவிக்குரிய ஆலோசனைகளை எழுதுவார்கள். சகோதரி.**விசுவாசம்** அவர்களை எங்களால் மறக்கமுடியாது. சில ஆண்டுகளுக்கு முன்பே அவர் கணவர் மரித்தார். கடந்த வருடம் 2015 சகோதரி. விசுவாசம் அவர்கள் மரித்துப்போனார். இவர்களின் ஆரம்பகால டேனிஷ்பேட்டை வாழ்க்கைக்காக நான் தேவனை துதிக்கிறேன். இவர்களின் பிள்ளைகளுக்கு கர்த்தர் ஆறுதலை தருவாராக.



# குடியரசு தின வாழ்த்துக்கள்:

நம் பாரத தேசத்தை பல்வேறு கால கட்டத்தில் பலர் நம்மை ஆண்டார்கள். மொகலாயர்கள் ஆண்டார்கள், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களை பிரான்ஸ், போர்ச்சுகீசியர் கடைசியாக வெள்ளையர்கள் (பிரிட்டன்) இப்படி பலர் நம்மை ஆண்டார்கள்.

நம் இந்தியாவின் அன்றைய தேச தலைவர்கள் ஜாதி, இனம், மதம், மொழி ஆகிய வித்தியாசம் பாராமல் அனைத்து மக்களும் சுதந்திரத்தை சாத்வீக முறையில் மகாத்மா காந்தியின் தலைமையில் நமக்கு பெற்று தந்தார்கள்.

அதனால்தான் நம்மை நாமே ஆண்டுக்கொள்ளும் பாக்கியம் நமக்கு கிடைத்தது. ஆகவே இந்த குடியரசு தினத்தில் நம் நாட்டின் சுதந்திரத்துக்காகவும் முடியரசை மாற்றி குடியரசாக மாற உதவிய அன்றைய தேச தலைவர்களுக்காகவும் பெற்றுதந்த குடியரசுக்காகவும் கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனை துதிப்போம்.

வாழ்க பாரதம்! வாழ்க குடியரசு! அனைத்து மாநில இந்திய மக்களுக்கும் ஜாமக்காரனின் குடியரசுதின வாழ்த்துக்களை அறிவிக்கிறோம்.



**JANUARY 2016**

# Printed Book/Book Post

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.